# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 ஆனி 32 வெள்ளிக்கிழமை [16-07-1999] UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 199


# செம்மணியில் புதைகுழி தோண்டும்

# 2 ஆம் கட்ட நடவடிக்கை செப். 6 இல்!

## அதற்கு முன் ராஜபக்ஷவும் மற்றும் நால்வரும் நீதிமன்றில் ஆஜராவர்

யாழ்ப்பாணம், ஜூலை 16

பெரும் மனிதப் புதைகுழி இருப்பதாகக் கருதப்படும் செம்மணியில் மனித எலும்புகள் மற்றும் எச்சங்களைத் தோண்டும் இரண்டாம் கட்ட நடவடிக்கைகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 6 ஆம் திகதி ஆரம்பமாகி செப்ரெம்பர் 30 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கின்றன.

இந்த நடவடிக்கைக்கான பூர்வாங்கப் பணிகளை மேற்கொள்ளவும் புதைகுழிகள் இருக்கக்கூடிய இடங்களை அடையாளம் காட்டவும் கிருஷாந்தி பாலியல் கொலை வழக்கின் மரணதண்டனைக் கைதிகளான ஐவரை அடுத்த மாதம் 30 ஆம் திகதி யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

செம்மணிப் புதைகுழி தொடர்பான விவகாரம் யாழ். நீதிமன்றத்தில் நேற்றுக் காலை மன்னார் நீதிபதியும், நீதிவானும், யாழ். மேலதிக நீதிவானுமாகிய எம். இளஞ்செழியன் முன் எடுக்கப்பட்டது.

செம்மணி மற்றும் அரியாலைப் பகுதிகளில் உள்ள புதைகுழிகளைத் தோண்டுவதற்கு விஞ்ஞான முறையிலான ஆய்வுகளை மேற்கொள்ளல் குற்றப்புலனாய்வுத்துறையின்

(9 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கு இணைப்பு கொள்கை அளவில் இணக்கம்

### நேற்றைய சந்திப்பின்போது

கொழும்பு, ஜூலை 16

வடக்கு -- கிழக்கு மாகாணங்களை நிரந்தரமாக இணைப்பது என்று அரசுக்கும், ஐ. தே. கவுக்கும் இடையில் கொள்கை அளவில் இணக்கம் ஏற்பட்டுள்ளது.

வர்த்தக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் அரசுப் பிரதிநிதிகளுக்கும், ஐ. தே. க பிரதிநிதிகளுக்கும் இடையிலான இரண்டாவது சந்திப்பு நேற்று நாடாளுமன்றக் கட்டடத்தில் இடம்பெற்றது.

[10 ஆம் பக்கம் பார்க்க)

## மோட்டார் சைக்கிளில் வந்தவர் சூட்டுக்குப் பலி

தென்மராட்சி, ஜூலை 16

மட்டுவில் தெற்குப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் ஒருவர் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு பலியான சம்பவம் நேற்று இடம்பெற்றது.

காலையில் இந்தப் பகுதியைப் படையினர் சுற்றி வளைத்து தேடுதல் நடத்திய போதே இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

இளைஞரின் சடலம் சாவகச்சேரி பொலீஸாரால் பொலீஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

மோட்டார் சைக்கிளும் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

(இ-117)

## புதைகுழி தோண்டுவதில் இழுத்தடிப்பு ஏன்?

### நீதிவான் கேள்வி

யாழ்ப்பாணம், ஜூலை 16

செம்மணியில் உள்ளதாகக் கூறப்படும் மனிதப்புதை குழிகளைத் தோண்டும் நடவடிக்கைகளை இழுத்தடித்துக் கொண்டு போகாமல் விரைவாக மேற்கொண்டு நீதியின்பால் மக்கள் நம்பிக்கை வைக்க உதவவேண்டும்.

மேற்கண்டவாறு யாழ். மேலதிக நீதிவான் எம். இளஞ்செழியன் நேற்று நீதிமன்றத்தில் குறிப்பிட்டார்.

செம்மணியில் புதைகுழி தோண்டும் நடவடிக்கையை பின்போடும் அரசசட்ட வாதியின் வாதம் தொடர்பாக கருத்து வெளியிடுகையிலேயே அவர் இபபடிக் கூறினார்.

நீதிவான் மேலும் தெரிவித்ததாவது:-

கிருஷாந்தி கொலை வழக்

(9 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் மின்மாற்றி சேதம்

கொழும்பு, ஜூலை 16

கொழும்பு 4 ஆம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள மின்மாற்றியில் நேற்று முன்தினம் இரவு 10.55 மணியளவில் குண்டு ஒன்று வெடித்தது.

இந்த குண்டு வெடிப்பால் மின்மாற்றிக்கு சேதம் ஏற்பட்டது ஆள்களுக்கு உயிர்ச் சேதம் ஏதும் ஏற்படவில்லை.

(இ-3)

## மட்டக்களப்பு, கல்முனை உட்பட மனித உரிமை ஆணைக்குழு 6 அலுவலகங்கள் மூடப்படும்

கொழும்பு, ஜூலை 16

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மட்டக்களப்பு, கல்முனை உட்பட ஆறு அலுவலகங்களைமூடுமாறு ஜனாதிபதி அலுவலகத்தில் இருந்து ஆணைக்குழுவுக்கு அறிவுறுத்தல் விடுக்கப் பட்டுள்ளதாகத் தெரியவந்தது.

மட்டக்களப்பு, கல்முனை மாத்தறை, கண்டி, பதுளை அநுராதபுரம் ஆகிய இடங்களில் உள்ள அலுவலகங்களையே மூடும்படி அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும்--

மன்னாரில் புதிய அலுவலகம் ஒன்றை ஆரம்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளதாகவும்-- தெரிய வந்தது.

அதேநேரம்--யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, அம்பாறை, கொழும்பு ஆகிய இடங்களில் உள்ள அலுவலகங்கள்தொடர்ந்து இயங்கும் எனக் கூறப்பட்டது.

[இ-3]

## கால அவகாசம் தேவை என அரச சட்டவாதி வாதம்

யாழ்ப்பாணம், ஜூலை 16

அரியாலைப் பகுதியில் புதைகுழி இருப்பதாக லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ தெரிவிக்கும் பிரதேசம் பாதுகாப்புக் காவலரணுக்கு சமீபமாக உள்ளது. அந்தப்பகுதியில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன. அவற்றை அகற்றவும், அந்தப் பகுதியில் உள்ள பங்கர்கள், காவலரண்கள் ஆகியவற்றை நூறு மீற்றர் தூரத்துக்கு விலக்கவும் கால அவகாசம் தேவையாக உள்ளது.

இப்படி அரச சட்டவாதி யசந்த கொத்தாக்கொட நேற்று யாழ். நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

செம்மணி விவகாரம் நேற்று யாழ். நீதிமன்றத்தில் எடுக்கப்பட்ட சமயம் அவர் தமது வாதத்தை எடுத்துக் கூறுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

( 9 ஆம் பக்கம் பார்க்க )

## எலும்புக்கூடுகளில் அடிகாயம்

யாழ்ப்பாணம், ஜூலை 16

செம்மணிப் புதைகுழியில் இருந்து தோண்டி எடுக்கப் பட்ட இரு எலும்புக் கூடுகளிலும் கூர்மையான ஆயுதங்களால் ஏற்படுத்தப்பட்ட அடிகாயங்கள் காணப்பட்டன. அதன் காரணமாகவே அவர்கள் இறந்துள்ளனர்.

கடந்த மாதம் 16ஆம் திகதி செம்மணியில் தோண்டி எடுக்கப்பட்ட இரு எலும்புக் கூடுகள் தொடர்பான ஆய்வறிக்கையில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த எலும்புக் கூடுகளின் எச்சங்கள் மற்றும் தடயப் பொருள்கள் ஆகியன தொடர்பாக சட்ட வைத்தியத்துறைப் பேராசிரியர் சந்திரசிறி நெரியல்ல மேற்

(9 ஆம் பக்கம் பார்க்க)

## அரசபடைகள் அப்படியே இருக்க நாம் பின்வாங்குவதா?

# கபடத்தனமான நிபந்தனைகளை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது

### பாதை திறப்பது குறித்து புலிகள் நேற்று அறிக்கை

வவுனியா, ஜூலை 16

''வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கும், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் இடையில் மாங்குளம் ஊடான பாதை திறப்பதற்கு அரசு முன்வைத்துள்ள கபடத்தனமான நிபந்தனைகளைத் தம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது'' என்று விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறை விடுத்துள்ள அறிக்கையிலேயே இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''மாங்குளம் பகுதியில் உள்ள எமது முன்னணிக் காவல் அரண்களை 5 கிலோ மீற்றர் தூரம் பின்வாங்கிச் செல்லுமாறும்—

5 கிலோ மீற்றர் தூரத்துக்கும் ஒரு கிலோ மீற்றர் அகலத்துக்கும் எமது நடமாட்டங்கள் இருக்கக்கூடாது என்றும்—

நிபந்தனை விதிக்கும் அரசாங்கம் தனது படையினரின்

[10 ஆம் பக்கம் பார்க்க]

## வெலிஓயாவில் மோதல்

கொழும்பு, ஜூலை 16

வெலி ஓயாவிலுள்ள கல்யாணபுர என்ற கிராமத்தில் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் நேற்று மோதல் ஒன்று இடம்பெற்றது.

இந்த மோதலின் போது 3 படையினரும் 5 விடுதலைப் புலிகளும் உயிரிழந்தனர் என்று பாதுகாப்புத் தலைமையகம் அறிவித்துள்ளது.

[10 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## தம்பித்துரை கமலநாதன்

கோண்டாவிலைச் சேர்ந்த தம்பித்துரை கமலநாதன் [உரிமையாளர், நோதன் மோட்டோர் வேக்ஸ்] அவர்கள் 15 - 7 - 99 வியாழக்கிழமை நண்பகல் காலமானார்.

அன்னார் மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும் காயத்திரி, திர்சான் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் தம்பித்துரை - சரஸ்வதி தம்பதிகளின் அன்புப் புத்திரனும் சற்குணநாதன், வைகுந்தநாதன் [ஜேர்மனி], கோகிலநாதன், தயாழினி [லண்டன்] ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று [16-7-99] வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் கோண்டாவில் கிழக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறுகேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
தம்பித்துரை
[தந்தை]
நோதன் மோட்டோர் வேக்ஸ்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

M S. லேன்,
கோண்டாவில் கிழக்கு.
[சி/8206]

## கணபதிப்பிள்ளை குமாரலிங்கம்
### (சதாசிவம்)

வெள்ளாம்போக்கடியைப் பிறப்பிடமாகவும் கச்சாய் கொடிகாமத்தை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை குமாரலிங்கம் 14- 07- 99 புதன் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

இவர் நாகம்மாவின் அன்புக் கணவரும் பூபாலசிங்கம் (அதிபர், யா/புத்தூர் மெ. மி. பாடசாலை— தலைவர், கமநல சேவை கேந்திர நிலையம், புத்தூர்), சண்முகநாதன் (கொழும்பு), புஸ்பவதி, புஸ்பதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும் கனகாம்பிகை (ஓய்வுபெற்ற ஆசிரியை), தம்பிராசா (ஓய்வுபெற்ற நில அளவையாளர்), திருமதி ப. சண்முகநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும் விஸ்ணகுமாரி (யாழ். பல்கலைக்கழக நுண்கலைபீடம்), விஸ்ணசிறி (யாழ். உயர் தொழில் நுட்ப கல்லூரி), சுலேகா, மீரு, துவிவர்ணன், றஜினி, வைகுந்தவாசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15- 07- 99 பி. ப. 3.00 மணிககு கச்சாய் பாலாவித்தான் மயானத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கு. பூபாலசிங்கம்
(மகன்)

கச்சாய் வீதி
கொடிகாமம்.
(67501)

## சபாரட்ணம் நவரட்ணம்

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் வேலணை மேற்கையும், தற்போது கொழும்புத்துறையையும் வதிவிடமாகக் கொண்ட சபாரட்ணம் நவரட்ணம் 15 - 07 - 99 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை சபாரட்ணம் —சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், பூபதியின் (வேலணை மேற்கு) அன்புக்கணவரும் நிர்மலா, நவஜீவன் [கனடா], நவச்செல்வன் [கனடா], நந்தினி [சுவிஸ்], நவக்குமார் [கனடா], காலஞ்சென்ற நவநீதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் திரு. அரியராஜா, கலாரஞ்சன் [சுவிஸ்], மாதினி, வசந்தி, குமுதினி [கனடா] ஆகியோரின் அன்பு மாமனாரும் மங்கைபற்கரசி [கொழும்பு], மனோன்மணி, காலஞ்சென்ற இராஜரட்ணம், துரைராஜசிங்கம், மல்லிகாதேவி [கனடா] ஆகியோரின் சகோதரனும், தர்சிகா, அனோஜன், மயூரி, மாறன், சஞ்சய், காயத்ரி, கவிட்ரா, நிரு, கபி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16-07-99) வெள்ளிக்கிழமை பி.ப ஒரு மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்
க. அரியராஜா
(மருமகன்)

71/25, புங்கங்குளம் றோட்,
கொழும்புத்துறை.
(67491)

## தம்பிராசா ஸ்ரனிஸ்லஸ் (சந்திரா)
### (இலங்கை வங்கி, இளைப்பாறிய முகாமையாளர்)

பாண்டியந்தாழ்வை வசிப்பிடமாகக் கொண்ட தம்பிராசா ஸ்ரனிஸ்லஸ் அவர்கள் 12 — 07 — 99 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா - ஸ்வகினம் தம்பதிகளின் அன்பு மகனும் றோஸ்மலரின் அன்புக் கணவரும், சந்திரிக்கா (லண்டன்), ரதிக்கா (பிரான்ஸ்), ரவிராஜ் (பிரான்ஸ்), அவர்களின் அன்புத் தந்தையும் டக்ளஸ் (லண்டன்), ராஜ்குமார் (பிரான்ஸ்), ரோகினி (பிரான்ஸ்), ஆகியோரின் அன்பு மாமனாரும் கரோளின், கொரின், பியோனா, Fabby, Frany ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16 — 07 — 99) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு (பழைய நேரம்) அவரது இல்லத்தில் இருந்து கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி றோஸ்மலர் ஸ்ரனிஸ்லஸ்

70/2, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(67500)

## கந்தர்மடத்தில் இளைஞர் ஒருவரை காணவில்லை.

யாழ். கந்தர்மடத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கடந்த 13ஆம் திகதி தொடக்கம் காணாமல் போய்விட்டார் என மனித உரிமைகள் ஆணைக்குவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கந்தர்மடம் அரசடி வீதியைச் சேர்ந்த கபிரியல் சொறிங்டன் (வயது 26) என்பவரே காணாமல் போனவராவார்.

இவர் 1996 ஆம் ஆண்டு தொடக்கம் 1998 ஆம் ஆண்டு வரையும் ஈ. பி. டி. பி. கட்சியில் இருந்தவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கடந்த 12 ஆம் திகதி வட்டுக்கோட்டையிலிருந்து காணாமல் போனதாக தெரிவிக்கப்பட்ட பாலகிருஷ்ணன் விஜிதரன் [வயது 19] என்பவர் நேற்று முன்தினம் வீடு திரும்பிவிட்டார் என உறவினர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் தெரிவித்தனர்.

இவர் அன்றைய தினம் விடத்தற்பளைக்கு சென்று மறுநாள் திரும்பிவந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

[இ-5-6]

## பண்டித மணி நூற்றாண்டு விழா

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை நூற்றாண்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தனங்கிளப்பு காரைத்தூ விநாயகர் ஆலயத்தில் பண்டிதமணி நூற்றாண்டு விழா சபைத் தலைவர் பொ. நவசிவாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பண்டிதமணி ஞாபகார்த்த அறவழிப் பாலர் பாடசாலையில் இருந்து காலை 8.30 மணியளவில் பண்டிதமணியின் உருவப்படம் விழா மண்டபத்துக்கு ஊர்வலமாக எடுத்து வரப்படும். அதனைத் தொடர்ந்து ஆலயத்தில் விசேட பூசைகள் இடம்பெறும்.

''பண்டிதமணியும் சமயப் பணியும்'' எனும் தலைப்பில் வித்துவான் சொக்கலிங்கமும் (சொக்கன்) ''பண்டிதமணியும் இலக்கியப் பணியும்'' எனும் தலைப்பில் கவிஞர் இ முருகையனும் ''பண்டிதமணியும்சைவசித்தாந்தமும்'' எனும் தலைப்பில் பிள்ளைக் கவி வ. சிவராசசிங்கமும் ''பண்டிதமணியும் தனங்கிளப்பும்'' எனும் தலைப்பில் ஆசிரியமணி அ. பஞ்சாட்சரமும் உரை நிகழ்த்துவர்.

அன்று அன்னதான நிகழ்வும் இடம்பெறும். (க-ரி)

ராஜா
யாழ்ப்பாணம்
ரஜனி - குஷ்பு
மற்றும் பலர் நடித்த
அண்ணாமலை
10-30, 2-30,
19 ஆம் திகதி முதல்
மின்சாரக் கனவு
[சி/8115]

நாகம்ஸ்
சுன்னாகம்
பிரசாந் - ஐஸ்வர்யா
நாசர் நடித்த
ஜீன்ஸ்
காட்சிகள் 11.00, 2.30
[புதிய நேரம்]
19 - 07 - 99 முதல்
[illegible]
[67341]

## வீரமக்கள் தின இறுதிநாள் நிகழ்வு இன்று அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 16

புளொட் அமைப்பினால் அனுஷ்டிக்கப்பட்டுவரும் வீரமக்கள் தினத்தின் இறுதி நாள் நிகழ்வாக புளொட்டின் ஸ்தாபகரும், செயலதிபருமான க. உமாமகேஸ்வரனின் 10 ஆவது ஆண்டு சிரார்த்த தின நிகழ்வுகள் இன்று அனுஷ்டிக்கப்படவுள்ளன.

புளொட் அமைப்பின் யாழ். பிராந்திய தலைமை அலுவலகத்தில் அனுஷ்டிக்கப்படும் இந்த சிரார்த்ததின நிகழ்வுடன் இந்த வருடத்துக்கான வீரமக்கள் தினம் நிறைவு பெறவுள்ளது.

கடந்த 13 ஆம் திகதி புளொட் உறுப்பினர்களின் இரத்ததான நிகழ்வுடன் ஆரம்பமான வீரமக்கள் தினத்தையொட்டி 14 ஆம், 15 ஆம் திகதிகளில் கோட்டை முனீஸ்வரன் தேவஸ்தான சுற்றாடல், யாழ். பஸ் நிலையப் பகுதிகளில் புளொட் யாழ். மாவட்ட பொறுப்பாளர் எஸ் தவராசா மற்றும் சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் அன்ரன் பொன்னையா ஆகியோரின் வழிநடத்தலில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

(இ-5)

## வாழ்த்துகின்றோம்

எமது கல்லூரியில் நீண்ட காலம் சங்கீத ஆசிரியராகக் கடமையாற்றி இளைப்பாறிய
''சங்கீத பூசணம்''
**திரு. வல்லிபுரம் செல்லத்துரை** அவர்கள்
''கலா பூசணம்''
விருது பெற்றுக் கௌரவிக்கப்பட்டமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
ஊழியர்கள், பா. அ. ச., ப. மா. ச.

யா/இடைக்காடு மகாவித்தியாலயம்,
அச்சுவேலி
[67498]

## கண்ணீர் அஞ்சலி

எமது ஆலய முன்னாள் பிரதம குரு
பிரம்மஸ்ரீ சோ. வெங்கடேஸ்வரக் குருக்கள்
அவர்களின் பாரியார்
**மீனாட்சி அம்மா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் பங்கு கொள்வதோடு அவரது ஆத்ம சாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தர்ம கர்த்தாக்கள் சபையினர்,
தொண்டர் சபையினர்,
கும்பழாவளைப் பிள்ளையார் கோயில்.
அளவெட்டி,
(67495)

# மரண அறிவித்தல்

## இராசரெத்தினம் பூரணம்

அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இராசரத்தினம் பூரணம் 13 - 07 - 99 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராசரத்தினத்தின் அன்பு மனைவியும் சாமுவேல் அன்சன்ஸ் முன்னாள் ஊழியர் ஜேந்திரா (ராசா), இராசேந்திரா (சுது), மகேந்திரா (இந்தியா), சந்திரலேகா, சந்திரிக்கா, சுகிர்தா (லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயாரும், தங்கரத்தினம் (லண்டன்), சரஸ்வதி (லண்டன்), காலஞ்சென்றவர்களான முத்தையா, முத்துச்சாமி, பரம்சோதி, சிவசோதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், அன்னலெட்சுமி, ஜெகதாம்பிகை, பவானி, (இந்தியா), பாலாம்பிகை, செல்வராசா (லண்டன்) காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், தங்கராசா ஆகியோரின் அன்பு மாமியாரும், இந்திரபாணு (நோர்வே), தர்சினி (நோர்வே), சுபாசினி (லண்டன்), சாமினி, வினோத், சதீஸ்குமார் (லண்டன்), ராஜ்குமார் (லண்டன்), ரவிசங்கர், (லண்டன்), உதயசங்கர் (லண்டன்), இதயரூபன், கவிஜெயந்தன், [லண்டன்], கௌசல்யா, வத்சலா [லண்டன்], வாசுகி [லண்டன்], வசீகரன் (இந்தியா), சிவப்பிரியா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ராகவன் (பரியோவான் கல்லூரி), கார்த்திகாயினி (சுண்டுக்குளிமகளிர் கல்லூரி), வர்ஷா ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16-07-99) வெள்ளிக்கிழமை காலை 9-00 மணியளவில் அவரது மகளின் இல்லமாகிய 22/5, புகையிரத வீதி, கச்சேரியடியில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்

22/5, புகையிரத வீதி,
கச்சேரியடி,
யாழ்ப்பாணம்.
(67492)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏற்கவியலா நிபந்தனையை விதித்து வீதி திறப்பை இழுத்தடிக்கிறது அரசு

வவுனியா, ஜூலை 16

ஏற்றுக்கொள்ள முடியாத புதிய நிபந்தனைகளை விதிப்பதன் மூலம் வன்னிப் பகுதியில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் இராணுவக் கட்டுப்பாடற்றபகுதிக்குமான மாங்குளம் ஊடான பாதையைத் திறப்பதை அரசு இழுத்தடிப்புச்செய்து வருகின்றது.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர்நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறுதெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது:

நீண்ட காலமாக இராணுவ நடவடிக்கைகளாலும் பொருளாதாரத் தடைகளாலும் பாரியநெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வாழ்ந்து வரும் வன்னி மக்களுக்கு உணவு மருந்து போன்ற அத்தியாவசியப் பொருள்களைக் கொண்டு வருவதற்கான ஓரேயொருமார்க்கமாக இருந்தது மன்னார் — உயிலங்குளம் பாதை. இப்பாதை கடந்த மாதம் 26 ஆம் திகதி படையினரின் 'ரணகோஷ — 4' படை நடவடிக்கை காரணமாக மூடப்பட்டது.

ஏற்கனவே உணவு மருந்து போன்ற அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாடு காரணமாக துன்பத்துக்குள்ளாகி இருந்த வன்னி மக்களுக்கு அத்தியாவசியப் பொருள்கள் கொண்டு வருவதற்கான போக்குவரத்துப் பாதை தற்போது தடைப்பட்டுள்ளதால் அவர்களின் வாழ்க்கை நிலைமை தற்போது மோசமடைந்துள்ளது.

இந்த மக்களின் துன்பங்களையும் கஷ்டங்களையும் ஓரளவுக்காவது தவிர்க்கும் நோக்குடன் யாழ் — கண்டி வீதியை வன்னிக்கான புதிய பாதையாக திறப்பதற்கு முடிவெடுக்கப்பட்டு கடந்த முதலாம் திகதி விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வனால் உத்தியோகபூர்வமாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வன்னி வதிவிடப் பிரதிநிதியிடம் தெரிவிக்கப்பட்டது

வன்னிக்கு அத்தியாவசியப் பொருள்கள் கொண்டு வருவதற்காக மூன்று போக்குவரத்துப் பாதைகள் அரசால் முன்மொழியப்பட்டு அவர்களது செய்தி ஊடகங்கள் மூலமாக ஏற்கனவே பிரச்சாரப்படுத்தப்பட்டன.

அரசால் வன்னிக்கான பாதைகளாக ஒட்டுசுட்டான் வீதி யாழ் — கண்டி வீதி, பூவரசங்குளம் — மூன்றுமுறிப்பு வீதி ஆகியன முன்வைக்கப்பட்டன.

இவற்றில் ஒன்றான யாழ். கண்டி வீதியைத் திறப்பதற்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஊடாக எமது சம்மதத்தை அரசுக்குத் தெரியப்படுத்தி இருந்தோம்.

கடந்த காலங்களில் மடு வீதி, மன்னார் உயிலங்குளம் வீதி, பாப்பாமோட்டை என்பன வன்னிக்கான போக்குவரத்துப் பாதைகளாக செஞ்சிலுவைச்சர்வதேசக் குழுவின் மேற்பார்வையின் கீழ் திறப்பதற்கு எம்மால் அனுமதி வழங்கப்பட்ட போதும் — பாதை திறந்த சிறிது காலத்துக்குள் அரசு இந்தப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு திட்டமிட்டு இந்தப் பாதைகளை மூடி வன்னிக்கான போக்குவரத்துப் பாதையை சீர்குலைத்தது.

இந்த நிலையில் தற்போது அரசு முன்மொழிந்த யாழ். கண்டி வீதியை திறப்பதற்கு நாம் சம்மதம் தெரிவித்த போதும் சற்றும் ஏற்றுக்கொள்ள முடியாத முன் நிபந்தனைகளை விதித்து திட்டமிட்டு பாதைத் திறப்பை இழுத்தடித்து வருகின்றது.

மாங்குளப் பகுதியில் உள்ள எமது முன்னணிக் காவல் அரண்களை 5 கிலோ மீற்றர் தூரம் பின்வாங்கிச் செல்லுமாறும் 5 கிலோ மீற்றர் தூரத்துக்கு ஒரு கிலோ மீற்றர் அகல வீதிகளைப் போட்டு புலிகளின் நடமாட்டங்கள் இப்பகுதிகளில் இருக்கக் கூடாது என்று நிபந்தனை வீதிக்கும் அரசாங்கம் படையினரின் முன்னணிக் காவலரண்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஒரு அங்குலம் கூட பின்வாங்கப்பட மாட்டாது என்று தெரிவித்துள்ளது.

அரசின் இவ்வாறான கபடத்தனமான நிபந்தனைகளை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது என செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகளிடம் நாம் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளபோதும்.

மாங்குளத்தில் உள்ள இருதரப்பினரதும் முன்னணிக் காவலரண்களுக்கு இடைப்பட்ட பிரதேசத்தை இராணுவ நடமாட்டமற்ற சூனியப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தி வன்னிக்கான பாதையைத் திறப்பதற்கு எமது சம்மதத்தை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஊடாக அரசுக்குத் தெரிவித்திருந்தோம்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் இலங்கைக்கான பிரதிநிதி நேரடியாக அரசு அதிகாரிகளுடன் பல தடவைகள் கலந்துரையாடியுள்ள போதும் இதுவரை பாதைத் திறப்பு தொடர்பான எதுவித உருப்படியான பதிலையும் அரசு தெரிவிக்கவில்லை.

வன்னி மக்களுக்கான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் எடுத்து வருவதற்கான பாதையைத் திறப்பது தொடர்பாக எமது தெளிவான — உறுதியான — நிலைப்பாட்டை மீண்டும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஊடாக அரசாங்கத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளோம்

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-6)

## காரைநகர் ஆஸ்பத்திரிக்கு அம்புலன்ஸ்

காரைநகர், ஜூலை 16

[illegible]

[illegible] அபிவிருத்தித் திட்ட நிறுவனத்தினால் சுகாதாரத் திணைக்களம் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் மேலதிக சிகிச்சைக்காக நோயாளிகள் யாழ். மருத்துவமனைக்கு கடற்படை அம்புலன்ஸ் மூலமும் பஸ் மூலமும் ஊர்காவற்றுறை ஊடாகவே கொண்டு செல்லப்பட்டனர். இதனால் வைத்தியசாலை ஊழியர்களும், பொதுமக்களும் பெரும் சிரமங்களை எதிர் நோக்கிவந்தனர்.

[ஐ-73]

## கண்ணீர் அஞ்சலி

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில்
முன்னாள் பிரதம குரு
அமரர்
பிரம்மஸ்ரீ சோ. வெங்கடேஸ்வரக் குருக்கள்
அவர்களின் பாரியார்


### மீனாட்சி அம்மா

அவர்கள் இறைபதம் அடைந்தமையையிட்டு எமது அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தி அடைவதாக.

அளவெட்டி சைவ வாலிப சங்கம்.

அளவெட்டி. (67496)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் கதிரேசு செல்லையா

[ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர்
நெடுந்தீவு – கிளிநொச்சி]

தவப்பேறு 19 – 07 – 1916
சிவப்பேறு 16 – 06 – 1999

மாதந்தான் ஒன்று சென்று மறையினும்
மறையாதுங்கள் கோதறு நினைவு
வாழ்வில் கொள்கையோடறிவு. நேர்மை
தீதறு எண்ணத்தோடு திகழ்ந்தீர்கள் ஐயா!
இப்போ இறவா வாழ்வு பெற்று இன்புற்றீர்
இருப்பீர் எம் இதயத்துள் என்றும்.

அன்னாரது இறுதி அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்ட அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் வேண்டிய உதவி ஒத்தாசைகள் புரிந்த நண்பர்கள், அயலவர்கள், உறவினர்களுக்கும் மலர் வளையங்கள், அனுதாபச் செய்திகள் சமர்ப்பித்தோருக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தோருக்கும் எமது உளம் நெகிழ்ந்த நன்றியறிதலைத் தெரிவிப்பதோடு இன்று வெள்ளிக்கிழமை [16-07-99] நிகழும் அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

—குடும்பத்தினர்.

இல. 316 நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (67482)

யாழ். மாவட்டத்தின்

## இந்துசமய கலாசார அலுவலர்கள் திணைக்களத்தின்

அனுசரணையுடன் நடைபெறும்

# தமிழ்க் கலாசார விழா - 1999

கைலாசபதி கலையரங்கம்
யாழ். பல்கலைக்கழகம்
1999 – 07 – 17 சனிக்கிழமை
காலை 9.00 — மாலை 5.00 மணி

### நிகழ்ச்சி நிரல்

08 30 மங்கள விளக்கேற்றல்

08 35 தமிழ்த்தாய் வாழ்த்து

08.45 வரவேற்புரை திரு. க. சந்திரராசா
(பிரதேச செயலர், சங்கானை)

08.50 தலைமையுரை திரு. து. வைத்திலிங்கம்
(மேலதிக அரசாங்க அதிபர், யாழ். மாவட்டம்)

09 00 மங்கள இசை
என். ஆர். கே [illegible]
என். கே. கே. வாகீஸ்வரன் குழுவினர்

10.00 பிரதம விருந்தினர் உரை
திரு. க. சண்முகநாதன்
(அரசாங்க அதிபர் யாழ். மாவட்டம்)
பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
(துணைவேந்தர் யாழ். பல்கலைக்கழகம்)

10 20 யாழ் இந்துமகளிர் கல்லூரி மாணவிகள் வழங்கும்
புஷ்பாஞ்சலி கீர்த்தனம், பொம்மலாட்டம்.
மீனவ நடனம்.
கலாபூஷண விருது வழங்கும் வைபவம்
விருதுபெறுவோர்:
திரு ரி. பொன்னுத்துரை
திரு. எல் திலகநாயகம்போல்
திரு. ஆர். ஞானசுந்தரம்
திரு. வி. செல்லத்துரை

11.30 சிறப்பு விருந்தினர் உரை
பேராசிரியர் க. பாலச்சந்திரன்
(கலைப்பீடாதிபதி, யாழ் பல்கலைக்கழகம்)

11.45 இலக்கியச் சொற்பொழிவு
"ஆழ்வார்களின் பாவனைத் திறன்"
உரை வழங்குபவர்
பேராசிரியர் அ. சண்முகதாஸ்
(பீடாதிபதி / உயர்பட்டப் படிப்புகள் பீடம்
யாழ். பல்கலைக்கழகம்)

12.30 இசை விருந்து
கலாபூஷணம் எல். திலகநாயகம் போல்
(உதவிக் கல்விப்பணிப்பாளர், கல்வித் திணைக்களம், யாழ்)

01 30 மதிய உணவு இடைவேளை

02 00 அன்பு இல்லம் நாடகம்
தயாரிப்பு நெறியாள்கை
கலாபூஷணம் நா செல்லத்துரை

02.45 யாழ். இந்துக்கல்லூரி மாணவர்கள் வழங்கும்
"விரல்கள்" நாடகம்
இன்னிசை - யாழ். இந்துக்கல்லூரி மாணவர்கள்

03 45 பளை வேணுகான சபா வழங்கும்
அரிச்சந்திர மயானகாண்டம்
இசை நாடகம்

04.45 நன்றியுரை
திரு. எஸ். புத்திசிகாமணி
(உதவி அரசாங்க அதிபர், [illegible])

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

செயலகம்,
யாழ்ப்பாணம்.
14-07-99 (சி/8203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

இணுவில் கற்பகப் பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த மகாலிங்கம் சுதர்சினி ஆகிய எனது விசேட அடையாள அட்டை (0906014284) மானிப்பாய்க்கும் சங்கானைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேல் உள்ள விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். (67457)

பாலசுப்பிரமணியம் ஜேதீஸ்வரன் என்பவருடைய விசேட அடையாள அட்டை [0904017941] வட்டுக் கோட்டைக்கும் சுன்னாகத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ச. பாலசுப்பிரமணியம் காளிகோயிலடி, வட்டு தெற்கு, வட்டுக்கோட்டை என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (67472)

ஸ்ரேசன் வீதி, மிருசுவிலைச் சேர்ந்த ஆரோக்கியநாதன் அன்ரன் சதீஸ்குமார் ஆகிய எனது தேசிய, விசேட (761393707 V) அடையாள அட்டைகள் 12-07-99 அன்று யாழ். ஸ்ரான்லி கல்லூரிக்கு அருகில் தவறிவிட்டன, கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் அல்லது 425, நாவலர் வீதி என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (67470)

### விற்பனைக்கு

ஜேசி இன பசுமாடும், ஒரு சோடி முயலும், மாட்டெருவும் விற்பனைக்கு உண்டு. சு. திருச்செல்வம் (இலங்கை வங்கி முன் ஒழுங்கை), இல. 57/30, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (67353)

## நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 16

யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி உதவி விரிவுரையாளார் திருமதி ஜெ. சரணபவ ஐயர் எழுதிய 'உடற் கல்வித் தத்துவங்களும் கோட்பாடுகளும்' எனும் நூலின் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் உடற்கல்வி மாணவர் மன்றத் தலைவர் நா. விஜயகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது. (க)

## திருவாசகத் தேன் துளிகள்

யாழ்ப்பாணம் ஜூலை 16

இடைக்காடு இந்து நெறிக் கழகம் தனது 14- வது கழக வெளியீடாக ''திருவாசகத் தேன் துளிகள்'' என்னும் நூலை மாணிக்கவாசகர் குரு பூசை தினமான இன்று வெள்ளிக்கிழமை இலவசமாக வெளியிடவுள்ளது.

இந்தக் கைந்நூலில் சிவபுராணம் முழுப்பதிகத்துடன் திருசத்திகம், திருக்கோர்த்தும்பி, கோயில் மூத்ததிருப் பதிகம், கோயில்திருப்பதிகம், செத்திலாப்பத்து, புணர்ச்சிப் பத்து, அருட்பத்து, குழைத்தபத்து. பிடித்தபத்து, திருப்புலம்பல், திருப்படையாட்சி, ஆனந்தமாலை, அச்சோபதிகம் ஆகிய பதிகங்களில் இருந்துதேர்ந்தெடுக்கப்பட்ட செய்யுள்சுளும் அடங்கியுள்ளன. இந்த நூலின் முன் அட்டை பின்னட்டைகளில் முறையே தில்லைக் கூத்தன் சிவகாமசுந்தரியுடனும் கயிலைவாசன் தியான நிலையிலும், உள்ளே மணிவாசகப் பெருமானை செந்தாமரைப்பூ தாங்கும் காட்சியும் அடங்கிய அழகிய வர்ணப்படங்கள் இந் நூலுக்கு அழகூட்டுகின்றன.

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த ஏக புத்திரன் வயது 27. மத்திய கிழக்கில் தொழில் பார்ப்பவருக்கு அழகிய பயிற்றப்பட்ட ஆசிரியை மணமகள் தேவை. மற்றவை நேரில். தொடர்பு:- விளம்பர இல. 914, மே/பா உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (67466)

### கையேடு

''பரீட்சைக்கான ஆயத்தமும் அவற்றை வெற்றிகரமாக எதிர்கொள்ளலும்'' பிரபல உளவியல் அறிஞர்களால் எழுதப்பட்டது. தனிப்பிரதி தேவையானோர், முப்பது ரூபா முத்திரை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். முகவரி ஜோ. எகட்டன் 19/3, கொழும்புத்துறை வீதி, (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி எதிர் ஒழுங்கை) சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (67481)

### அன்பளிப்பு

மாணிக்கவாசகர் சுவாமிகளின் குரு பூசையை முன்னிட்டு அவரது படத்தினை அன்பளிப்பாகப பெற்றுக் கொள்ளவும். இ. தவகோபால் 525/12, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (சி/ 8188)

### ஆங்கிலம் விசேடமாக

ஆரம்பத்திலிருந்து O/L இல் Distinction, Credit பெறுபேறடையவும். G.A.Q பட்டப் படிப்பு ஆங்கிலம் கற்பிக்கப்படும். B.Sc London Inter ஆசிரியர் 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (67428)

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள சிசில் டிலுக்ஸ் குளிர்சாதனப் பெட்டி ஒன்றும் சேவிஸ் மோட்டார்கள் இரண்டும் விற்பனைக்குண்டு. தொடர்பு: சோ. சிவராசா (மோட்டார் சைக்கிள் மெக்கானிக்) இல. 97, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (67479)

### யாழ்ப்பாணம்

அராலியூர் ந. சுந்தரம் பிள்ளையின் நான்கு நூல்களையும் வாங்குபவர்களுக்கு 20% கழிவு தரப்படும். நேரில் வருக. 30, கடைச்சாமி வீதி. நீராவியடி, யாழ்ப்பாணம், பரிசளிப்பதற்கு ஏற்ற நூல்கள் ரூபா 50. (67451)

## தேவை

கடைச்சல் வேலை தெரிந்தவர்கள் உடன் தேவை.

தொடர்பு:

**செல்வா ஹாட்வெயர்ஸ்**

120, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
[67488]

ஜோ. எகட்டனின்

**ஜெசித்தாராவின்**

மதிய உணவுப்பொதிகளை
தாமதமின்றி
முற்பகல் 11-45 மணி முதல்
2-45 மணி வரை
பெற்றுக்கொள்ளலாம்.
விலை ரூபா 35.00 மட்டுமே

**ஜெசித்தாரா**

சுண்டுக்குளி மகளிர்
கல்லூரிமுன் ஒழுங்கை,
சுண்டுக்குளி.
(67473)


மக்கள் யுத்தத்தின் மகத்தான தளபதி

அமரர் தோழர்

## க. உமாமகேஸ்வரன்

அவர்களின்

# 10-வது சிரார்த்த தினம்



புரட்சியாளர்கள் என்றுமே
மண்ணில் புதைக்கப்படுவதில்லை
விதைக்கப்படுகின்றனரெனும்
விந்தைதனை உலகறியச் செய்தவனே!
வியர்வையும் கண்ணீரும்
மண்ணை நனைக்கும்
விவேகமும் வேகமும் விண்ணைத்தொடும்
வீரமும் தீரமும் மண்ணை மீட்கும்
தோழா! உன் இலட்சியத்தில் உறுதி கொண்டு
நாமும் எந்த மொழியாலும்
எந்த மதத்தாலும் எந்த சாதியாலும்
பிரிக்க முடியாத சமூக அமைப்பினை
நிறுவி சகோதரத்துவப் பயிரை
அறுவடை செய்வோம்.

தமிழர் உரிமைப் போராட்டத்தில் உயிர் நீத்த, பலியான தலைவர்கள், தளபதிகள், சக போராளிகள், கழகக் கண்மணிகள், பொதுமக்கள் அனைவருக்கும்

**எமது இதய அஞ்சலிகள்**

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (DPLF)
தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOTE)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த நாட்டின் ஆட்சி உரிமை சிங்கள பௌத்த மக்களுக்கே உரியது

## வீரவிதான அமைப்பு பிரமுகர் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 16

சிங்கள பௌத்த நாகரிகம் காணப்படும் இந்த நாட்டின் ஆட்சி உரிமை சிங்கள பௌத்த மக்களுக்கே உரித்தாக வேண்டும். ஏனையோர் இந்த நாட்டில் வாழ்பவர்களே. அவர்களுக்கு ஆட்சி உரிமை கிடையாது.

சிங்கள வீரவிதான இயக்கத்தின் செயற்குழு உறுப்பினர் கலாநிதி சூரிய குணசேகர இவ்வாறு தெரிவித்தார்.

வீரவிதான அமைப்பின் 4 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி கண்டி அஸ்கிரிய சர்வ தேச பௌத்த மத்திய நிலையத்தில் நடைபெற்ற மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

சிங்கள இனத்தின் உரிமைகள் பறிக்கப்படும் அச்சுறுத்தல் தலை தூக்கியுள்ளது. தமக்கேற்பட்டுள்ள அச்சுறுத்தல் குறித்து சிங்கள மக்கள் குரல் எழுப்பி முழு உலகுக்கும் தெரியப்படுத்தவேண்டும்.

தமது உரிமைகளைத் தெரிவிக்கும் வரை அந்த உரிமைகள் சிங்களமக்களுக்கு கிடைக்காது என்பதை நாம் உணரவேண்டும்.

நாட்டில் உள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் காரணம் தேசிய இனத்தவரும் நாட்டில் வாழ்பவர்களும் ஒரே மாதிரி கவனிக்கப்படுவதே. இது வீட்டு உரிமையாளரும் வீட்டில் வாடகைக்கு இருப்பவரும் போன்றதாகும்.

சிங்கள மக்களின் உரிமைகள் பறிக்கப்படும் சவால் ஏற்பட்டுள்ளதற்கு இதுவே காரணமாகும்.

இந்த நாட்டு சிங்கள மக்களின் இதயங்களோடு பேச சிங்கள வீர விதான அமைப்பாலேயே முடியும். கட்சி அரசியல் காரணமாக சிங்கள மக்கள் பிளவுபட்டுள்ளனர். ஆனால் ஏனைய சிறுபான்மை இனங்கள் அவ்வாறு பிளவுபடவில்லை. கட்சி அரசியலால் சிங்கள இனம் பிரிக்கப்படுவதைத் தடுக்கவே வீரவிதான இயக்கம் உருவாக்கப்பட்டது.

இப்படி அவர் கூறினார்.

மாநாட்டின் இறுதியில் கொள்கைப் பிரகடனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

1815 ஆம் ஆண்டு கண்டி உடன்படிக்கையின் படி 1848 ஆம் ஆண்டு வரை இலங்கை 'சிங்களே' என்ற பெயரிலேயே குறிப்பிடப்பட்டு வந்துள்ளது. மீண்டும் இந்தப் பெயர் நாட்டுக்குச் சூட்டப்பட வேண்டும். இந்த நாட்டு உரிமையாளர் சிங்களவர்கள் இங்கு வாழும் மக்கள் அனைவரும் சிங்கள இனத்தவரென அடையாளப்படுத்தப்படவேண்டும் என்றும்— அந்தத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-6)

# மேலும் 700 பட்டதாரிகளுக்கு இரண்டு மாதங்களில் நியமனம்

அடுத்த இரண்டு மாதங்களுக்குள் மேலும் 700 பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

கடந்த மே மாதம் ஆரம்பிக்கப்பட்ட— 8 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் — திட்டத்தின் கீழ் இந்த நியமனங்கள் வழங்கப்படும்.

இதற்கு முன்னர் நியமனம் வழங்கப்பட்ட தொகுதியில் சில பட்டதாரிகள் தமது நியமனங்களை ஏற்றுக்கொள்ளவில்லை என்றும்— இதனால் அந்த இடங்களுக்கு புதிய நியமனங்கள் வழங்கப்படவுள்ளன என்றும்— வரவு செலவுத் திட்ட உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தெரிவுசெய்யப்படும் பட்டதாரிகளுக்கு சம்பளம் வழங்குவதற்கான நிதியை திறைசேரி ஒதுக்கீடு செய்துள்ளது. பயிற்சிக் காலத்தின்போது அவர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவாக 4 ஆயிரம் ரூபா வழங்கப்படும். [இ-6]

# தெல்லிப்பழைப் பிரிவில் நாய்களுக்குத் தடுப்பூசி

சண்டிலிப்பாய், ஜூலை 16

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வீட்டு வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த்தடுப்பு ஊசி மருந்துஏற்றும் பணிஎதிர்வரும் 19ஆம் திகதி திங்கட்கிழமையன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கான ஒழுங்குகளைத் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொறுப்பதிகாரி என். சதாசிவம் செய்துள்ளார்.

இதன் பிரகாரம் 19 ஆம் திகதி திங்கட்கிழமையன்று தாவடி காளி கோயிலடி, தாவடி பத்திரகாளி கோயிலடி, தாவடி பிள்ளையார் கோயிலடி, தேவாலய வீதி ஆகிய இடங்களிலும்,—

20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தாவடி வன்னியசிங்கம் வீதி கி.மு.ச. மண்டபம், இராஜா மில்லடி, தாவடி வடக்கு ச.ச. நிலையம், தாவடி ஆரம்ப சுகாதார நிலையம் ஆகிய இடங்களிலும்,—

21 ஆம் திகதி புதன்கிழமை துரைவீதி அண்ணா தொழிற்சாலை, வல்லவன் வீதி மணிமாமா பேக்கறி, புளித்திட்டி ச.ச. நிலையம், இணுவில் கிழக்கு பாலாவோடை ஆகிய இடங்களிலும்,—

22 ஆம் திகதி வியாழக்கிழமை இணுவில் மேற்கு ச.ச. நிலையம், இணுவில் மேற்கு மஞ்சத்தடி, இணுவில் தியேட்டர் ஒழுங்கை, கலாஜோதி ச.ச. நிலையம் ஆகிய இடங்களிலும்,—

23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை உடுவில் கிழக்கு அண்ணா ச.ச. நிலையம், உடுவில் கிழக்கு கற்பகப் பிள்ளையார் கோயிலடி, மல்வம் கத்தோலிக்க தேவாலயம், உடுவில் ஈஸ்வரன் பேக்கறி ஆகிய இடங்களிலும்,—

24 ஆம் திகதி சனிக்கிழமை உடுவில் தெற்கு புதுமடம் கத்தோலிக்க தேவாலயம், உடுவில் ஆலடி ச.ச. நிலையம், சங்குவேலி வடக்கு ச.ச. நிலையம், சங்குவேலி தெற்கு ச.ச. நிலையம் ஆகிய இடங்களிலும் நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பு ஊசி போடப்படவுள்ளது.

(ஐ-135)

# தாமதமாகக் கிடைத்த பரீட்சை அனுமதி அட்டைகள்

தென்மராட்சி, ஜூலை 16

கொழும்பில் கடந்த மூன்றாந் திகதி நடைபெற்ற அரசாங்க, மாகாண சேவையைச் சேர்ந்த தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான எழுத்துப் பரீட்சைக்குரிய அனுமதி அட்டைகள் இங்குள்ள பல பரீட்சார்த்திகளுக்குக் கடந்த 12 ஆம் திகதியே கிடைத்துள்ளன.

இதனால் பல பரீட்சார்த்திகள் இப் பரீட்சைக்குத் தோற்ற முடியவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

பரீட்சைத் திணைக்களத்தினால் அனுமதி அட்டைகள் வடக்கு—கிழக்கு மாகாண சபைக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து கடந்த ஜூன் 28 ஆம் திகதி தபால் மூலம் அனுப்பப்பட்ட அனுமதி அட்டைகளே கடந்த 12 ஆம் திகதி கிடைத்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

# நெடுந்தீவில் கிணறுகள் சுத்திகரிப்பு

நெடுந்தீவு, ஜூலை 16

நெடுந்தீவு மேற்கு ஐக்கிய தீபம் சனசமூக நிலையத்தினர் அப்பகுதியில் உள்ள குடிதண்ணீர்க் கிணறுகள், கால்நடைகளுக்கான கேணிகள் என்பவற்றை சிரமதான அடிப்படையில் இறைத்துச் சுத்தம் செய்து வருகின்றனர்.

பொதுத்தாபனங்கள் சிரமதான அடிப்படையில் நீர்நிலைகளைச் சுத்தம் செய்து உதவ வேண்டும் என பிரதேச சபைத் தலைவர் மேற்படி ஸ்தாபனங்களுக்குக் கோரிக்கை விடுத்திருந்தார்.

[ஐ-111]

# தமிழ்தேசியஇனவிடுதலைப்போரின் முற்போக்கு சிந்தனையாளன் உமா

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவர் உமாமகேஸ்வரனின் நினைவு தினத்தை ஒட்டி இக் கட்டுரை பிரசுரமாகுகின்றது.

இலங்கைத்தீவில் அடக்குமுறைகளினாலும் ஒடுக்குமுறைகளினாலும் நான்கு தசாப்தங்களுக்கு மேலாக ஒரு தேசிய இனத்துக்குரிய தனித்துவ உரிமைகள் யாவும் திட்டமிட்டுப் பறிக்கப்பட்டு இருந்த தமிழ்த் தேசிய இனம் தனது தலைவிதியைத் தானே தீர்மானிக்க வேண்டுமென்ற உறுதியான இறுதியான நிலைப்பாட்டைக் கையிலெடுத்த போது அந்த மக்களின் உணர்ச்சிகரமான போராட்டத்திற்கு புரட்சிகர அமைப்பு வடிவம் கொடுத்த மக்கள் யுத்தத்தின் மகத்தான தளபதி அமரர் தோழர் உமாமகேஸ்வரன் அவர்களே!

பேச்சுக்களிலும் அகிம்சைப் போக்குகளிலும் எதையுமே சாதிக்க முடியாது ஏமாற்றப்பட்டும் புறக்கணிக்கப்பட்டும் வந்த எமது இனம் இழந்து நின்ற உரிமைகளை ஆரம்பத்தில் இரந்து கேட்டுப் போராடிய மக்கள் சக்தியின் ஈடு இணையற்ற தலைவன்.

மலையகத் தமிழன் தனது தாயக மண்ணில் துரத்தியடிக்கப்பட்டு மரணத்தின் வாசலில் விடப்பட்டு எதிரிகளாக்கப்பட்டபோது அவர்கள் எமது தாயக மண்ணில் அகதிகளே அல்ல என்று அன்போடு அழைத்து ஆற அமர அடிப்படைத் தேவைகளை அள்ளி வழங்கிய மனிதாபிமானம் கொண்ட தலைவர்.



1988 ஆம் ஆண்டு இடம் பெற்ற ஒரு விருந்துபசார வைபவத்தில் விஜேகுமாரணதுங்க, சந்திரிகா ஆகியோருடன் உமா மகேஸ்வரன்.

எமது போராட்டம் இனவாதச் சேற்றுக்குள் புதைக்கப்படுவதன் மூலம் சிங்கள தேசிய இனத்தின் புரையோடிப்போன வர்க்க முரண்பாடுகள் மறைக்கப்படுவதை அல்லது அதன் மூலம் சாதாரண சிங்கள மக்களிடையே ஆளும் வர்க்கம் தமிழின விரோத உணர்வை வளர்க்காமல் தடுப்பதன் மூலமே எமது போராட்டத்தை இலகுவாக்கலாம் என்று இறுதிவரை நம்பிய இனப்பற்றுள்ள உண்மையான தலைவன்.

நாட்டின் சாதாரண சிங்கள மக்களிடையே எமது உரிமைகளுக்கான நியாயமான கோரிக்கைகள் குறித்த அக்கறையையும் அழுத்தமான அபிப்பிராயத்தையும் ஏற்படுத்தவும் அதன் மூலம் எமது இனத்தின் அபிலாசைகளைச் சிங்கள ஆளும் வர்க்கம் நிராகரிக்க முடியாதவைகளாக்கிடவும் வான் அலைகளில்எமது எண்ணங்களையும் எதிர்பார்புக்களையும் செலுத்தி புதிய உணர்வுகளை அந்த மக்களிடையே உருவாக்கியவர்.

போராட்டத்திலோ அன்றி யுத்தத்திலோ சிநேக, பகை முரண்பாடுகளைக் கண்டு கொள்ளத்தவறிய — கண்டு கொள்ள விரும்பாத—தமிழ்ப் போராட்டத் தலைவர்களிடையே தனது பாசறையின் ஆயிரமாயிரம் இளைஞர்கள் அழிக்கப்பட்டும் தனதுஸ்தாபனம் சகல முனைகளிலும் அழித்துக் குலைக்கப்பட்டிருந்த நிலையிலும் 'கூட சகோதரப் போராளிகள் அனுமதிக்க முடியாது' என புலிகளுக்கெதிரான கடுமையான இந்தியத் தாக்குதலைக் கண்டித்து நியாயமான — முறையான — போராட்டத்தின் இலக்கணங்களை இனத்தின் அழிவைத் தடுப்பதில் தனக்கு இருந்தஅக்கறையை— இனத்தின் முழுமையான விடுதலை குறித்து தான் கொண்டிருந்த தொலைநோக்குப் பார்வையை — தனது இறுதிக் காலகட்டத்திலும் கூட பறைசாற்றிய தமிழ்த்தேசிய இனத்தின் முற்போக்கு சிந்தனையாளன்.

எமது தேவைகளை — அபிலாசைகளை — அங்கீகரித்து தமிழ்த்தேசிய இனத்தின் உரிமைகளைப் பெற்றிட உதவவேண்டிய சிங்கள, முஸ்லிம், மலையக மக்களால் உயரிய எமது போராட்டம் இனத்துவேச முலாம் பூசி விடப்பட்டுள்ளது. புரட்சிவாதிகள் பயங்கரவாதிகளாக்கப்பட்டுள்ளனர்.

உரிமைகள் மறுக்கப்பட்டு உடைமைகள் சூறையாடப்பட்டு உயிர்களைக் கையில் பிடித்து வாழும் நிலைக்கு எமது இனம் தள்ளப்பட்டு எம்மைப் பாதுகாக்க ஒரே வழி ஆயுதங்களை நாமும் தாங்குவதே என்று தூங்கிக் கிடந்த தமிழினத்தை தட்டியெழுப்பிய இளைஞர் படையின் இணையற்ற தளபதி

எமது தமிழ்த் தேசிய இனம் தனது முழுமையான விடுதலையைப்பெற்றிட வேண்டுமாயின் இத்தீவின் சகல சிறுபான்மை இனங்களினாலும் பரஸ்பரம் சக தேசிய இனங்களின் உரிமைகள் அங்கீகரிக்கப்பட வேண்டுமென்ற உயரியநோக்கைத் தனதுவாழ்நாள் பூராவும் நடைமுறைப்படுத்திய மதி நுட்பம் நிறைந்த உயர்ந்த தலைவர்.

தமிழ்பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பதற்கான போராட்டத்தில் பேரினவாத அரசுகளால் நாட்டின் தென்பகுதியில் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டு வந்த தலைவர்களோடும் நாட்டில் இனவாதத்தைப் பூண்டோடு ஒழித்து சமாதானத்துடன் கூடிய சமத்துவமும் சகோதரத்துவமும் மலர வேண்டுமென்று உழைத்து வந்த பெரும்பான்மை சமூக முற்போக்குத் தலைவர்களான் தோழர் விஜேகுமாரணதுங்க, தோழர் எஸ். டி. பண்டாரநாயக்க, தோழர் சரத் முத்தெட்டுவேகம போன்ற தலைவர்களுடன் உறவுகளை வலுப்படுத்தி எமது மக்களின் நியாய பூர்வமான உரிமைகளை சிங்கள மக்களும் ஏற்றுக் கொள்ளும் நிலையை உருவாக்குவதில் முனைப்புடன் செயற்பட்டு அம்முயற்சியில் கணிசமான வெற்றியையும் கண்ட மகத்தான புரட்சியாளன் தோழர் உமாமகேஸ்வரனே.

**– செ. கிருபைராஜா –**

பிரச்சாரச் செயலர்
ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி மக்கள் படும் இன்னல் தீர பாதை திறப்பதை துரிதமாக்குங்கள்

## ஜனாதிபதிக்கு யாழ். ஆயர் கடிதம்

யாழ்ப்பாணம், ஜூலை 16 வன்னியில் வசிக்கும் பொது மக்கள் அனுபவிக்கும் இன்னல்களைக் கருத்திற்கொண்டு வன்னிக்கான போக்குவரத்துப் பாதை ஒன்றை உடனடியாகத் திறக்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ். ஆயர் அதிவந். தோமஸ் சௌந்தரநாயகம் ஜனாதிபதியிடம் கேட்டிருக்கிறார்.

இது தொடர்பாக ஜனாதிபதிக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்தின் முழு விவரமும் வருமாறு:—

வன்னிக்கான சகல தொடர்புகளும் கடந்த மாதம் 15 ஆம் திகதியிலிருந்து அறுபட்ட நிலையிலிருப்பதைச் சுட்டிக்காட்டவிரும்புகிறேன். பாதை திறக்கப்படாததால் ஏற்படும் மனித அவலங்கள் பல. உணவுத் தட்டுப்பாட்டால் உருவாக்கப்படும் பட்டினிச் சாவுகளைத் தடுக்க அரசு வன்னிக்கான பாதையை உடனடியாகத் திறக்க வேண்டும் என விநயமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

வன்னிப்பாதை மூடப்பட்டதனால் பல நோயாளிகள் உயர் சிகிச்சைக்காக அம்புலன்ஸ் வாகனத்தில் வவுனியா வைத்திய சாலைக்கு வரமுடியாமல் இறப்பதையும் உங்கள் கவனத்துக்கு முன் வைக்கிறேன்.

இப்பாதை திறக்கப்படாததால் பொது மக்களின் பிரயாணம் தடைப்பட்டுள்ளதுடன் திரும்பிச் செல்ல முடியாது ஆயிரக் கணக்கான மக்கள் வவுனியா, மன்னார் போன்ற இடங்களில் தங்கியுள்ளார்கள் என்பதையும் எடுத்துக்காட்ட விரும்புகின்றேன்.

மாங்குளம் சோதனைச் சாவடியை யுத்த சூன்யப்பிரதேசமாக அறிவித்ததை வரவேற்கிறேன். இப்பிரதேசத்தில் எந்தவித இராணுவ செயற்பாடும் இடம்பெறுவதைத் தவிர்க்கவேண்டும். கடந்தகாலங்களில் பாவனைக்கான பாதைத் திறப்பைப் பயன்படுத்தி இராணுவ நடவடிக்கைக்கு பயன்படுத்தப்பட்டுள்ளதால் தமிழீழ விடுதலைப் புலிகளின் அச்சவுணர்வையும் விளங்கிக் கொள்ளவேண்டும்.

மேலும் பல நிபந்தனைகள் விதித்து பொது மக்களின் பாவனைக்கான பாதைத் திறப்பை காலம் தாழ்த்தாது உடனடி பாவனைக்கு திறக்க சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளும்படி தயவுடன் கேட்டுக் கொள்கிறேன் — என்று ஆயர் தெரிவித்துள்ளார்.

★

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்

**கதிரேசு செல்லையா**

எமது கல்லூரி ஆசிரியர்

**செ. இளங்கோ**

அவர்களின் அன்புத் தந்தையார் காலமானதையிட்டு இன்று நடைபெறும் 31 ஆம் நாள் நினைவு நாளில் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

(சி/ 8193)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



| உதயம் | மறைவு |
|---|---|
| 25 — 04 — 1955 | 16 — 07 — 1996 |

**திருமதி மீனாம்பிகை பாக்கியநாதன்**

(சட்டமாணியும், சட்டத்தரணியும், பிரசித்த நொத்தாரிசும். சத்திய ஆணையாளரும் )

ஆண்டு மூன்று சென்றதுவே எங்கள் மீனா
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
எங்கள் மனம் ஆறாது அம்மா.

உம் நினைவில் வாழும்
கணவன், பிள்ளைகள்,

மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.

[ 67390 ]

## நினைவஞ்சலி

**8 ஆம் ஆண்டு** **2 ஆம் ஆண்டு**



செல்வி
**செல்லையா சாந்தினி**

மலர்வு 25-06-1964
உதிர்வு 25-03-1991



திருமதி
**செல்லையா புவனேஸ்வரி**

(பலாலி)

மலர்வு 08-08-1935
உதிர்வு 09-07-1997

திதி: 17 - 07 - 1999

ஆண்டுகள் இரண்டு சென்றாலும் உங்கள் நினைவுகள் அழிவதில்லை.

கரம்பொன் மேற்கு,
ஊர்காவற்றுறை

சி. செல்லையா

[67317]

## வாராந்த நிகழ்வு

கொழும்புத்துறை, ஜூலை 16 தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் தொண்டமனாறு அருள் மிகு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலய சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வில் இன்று வெள்ளிக் கிழமை முற்பகல் 10-30 மணிக்கு ''வயலின் இசை'' தம்பு சற்குருநாதன் குழுவினரால் நடத்தப்படும்.

பேரவையின் தலைவர் சு. திருப்பரங்கிரிநாதன் தலைமையில் இந் நிகழ்வு இடம் பெறும்.

இந் நிகழ்விற்கான அறிமுக உரையை அச்சுவேலி நா. கணபதிப்பிள்ளை (சின்ன மணி) நிகழ்த்துவார்.

(30-173-109)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# வெள்ளிவிழா அழைப்பு

வெள்ளிவிழா முன்னோடி நிகழ்ச்சித்தொடர்

**இந்துநாகரிகக் கருத்தரங்கு!**

**இந்துக்களின் வாழ்வியல் நோக்கில் கிரியைகளும் சடங்குகளும்**

இந்துசமயக் கிரியைகள் சடங்குகள் தொடர்பான தெளிவையும் விளக்கத்தையும் ஏற்படுத்துவதற்கான கருத்தரங்கு

காலம்: 1999 - 07 - 18 ஞாயிற்றுக்கிழமை
காலை 9-00 — 1-00 மணி வரை

இடம்; கைலாசபதி கலையரங்கு

தலைவர்: பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர்
தலைவர், இந்துநாகரிகத்துறை

### ஐயந்தீர்க்கும் ஆன்றோர் அவை

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள்
அதிபர் தர்மசாஸ்தா குருகுலம். இணுவில்

சிவஸ்ரீ ச. மகேஸ்வரக்குருக்கள்
தலைவர், இந்துமதக்குருமார் ஒன்றியம், யாழ்ப்பாணம்

சிவஸ்ரீ கி. சோமசுந்தரக்குருக்கள்
பிரதம குரு ஞானவைரவர் ஆலயம், சாவகச்சேரி

சிவஸ்ரீ பா. சர்வேஸ்வரக்குருக்கள்
நூலக அபிவிருத்தி அலுவலர், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, சுன்னாகம்

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை

சிவஸ்ரீ ஐ. திருஞானசம்பந்தக் குருக்கள்
கல்வியங்காடு.

### நிகழ்ச்சி நிரல்

இறைவணக்கம்

தொடக்கவுரை

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்

வாழ்த்துரை

பேராசிரியர் அ. சண்முகதாஸ்
பீடாதிபதி, உயர்பட்டப் படிப்புகள் பீடம்

பேராசிரியர் செ. பாலச்சந்திரன்
கலைப்பீடாதிபதி

கருத்துரை வழங்குவோர்

திருமதி கலைவாணி இராமநாதன்
''இந்துக்களும் திருமணச் சடங்குகளும்''

திருமதி நாச்சியார் செல்வநாயகம்
''அபரக்கிரியைகள் ஒரு நோக்கு''

கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ்
''இந்துக்களும் பூப்புநீராட்டு விழாவும்''

திரு. பு. கணேசலிங்கம்
''இன்றைய சமய விழாவின் ஆலயக் கிரியைகள்''

திருமதி சுகந்தினி ஸ்ரீமுரளிதரன்
''கலைநோக்கில் இந்துக் கிரியைகள்''

செல்வி விக்னேஸ்வரி சிவசம்பு
''இந்துக்கிரியைகளில் பெண்களின் முக்கியத்துவம்''

### () கலந்துரையாடல் ()

★ இல்லத் தலைவிகள் நிச்சயம் கலந்து பயன்பெற வேண்டிய கருத்தரங்கு இதுவாகும்.

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி/8198)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பனையும் தென்னையும்

பனை மற்றும் தென்னை வளர்ப்பில் ஊக்கம் அளிக்கும் தகவல்கள் வெளிவந்துள்ளன. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் உதவியுடன் நான்கு இடங்களில், மொத்தம்40 ஏக்கர் நிலப்பரப்பில் பனை அபிவிருத்திச் சபை மாதிரிப் பனந்தோட்டங்களை நிறுவியுள்ளது என்பது ஒரு செய்தி, தென்னை நாற்றுகளை வளர்ப்பதற்காக 10,000 தேங்காய்களை பனையில் உள்ள தென்னை அபிவிருத்திச் சபை தெற்கிலிருந்து தருவித்திருக்கிறது என்பது மற்றைய செய்தி.

1990 ஆம் ஆண்டில் ஈழப் போர் இரண்டு தொடங்கிய காலத்தில் இருந்து யாழ்ப்பாணத்தின் தேசிய விருட்சமான பனையும் பலவகைப பயன் தரும் தென்னையும் பெரும் எண்ணிக்கையில் பல வழிகளாலும் அழிக்கப்பட்டன. போர் இப்பிரதேசத்தில் நின்று போன பின்னரும் அந்த அரிய விருட்சங்கள் தொடர்ந்து அழிக்கப்பட்டன. இன்னும் முற்றாக நிறுத்தப்பட்டதாக இல்லை.

ஆகையால் இந்த விருட்சங்கள் இரண்டையும் புனர் நடுகை செய்து வளர்த்தெடுத்தால் மட்டுமே எங்கள் வாழ்வுக்கும் பொருளாதாரத்துக்கும் உண்டான நட்டத்தை ஓரளவு ஈடு செய்ய முடியும்.

இதில் அரசாங்கம் தனது கணிசமான பங்களிப்பை செய்ய வேண்டும். அழிந்த பனை தென்னைகளில் மிகக் கூடுதலானவை அழிக்கப்படுவதற்கு அரசாங்கமும் படையினரும் காரணர்கள் என்பதால் புனர் நடுகையில் அக்கறை காட்ட வேண்டியது கடமையாகும்.

ஆயினும் அரசை மட்டும் நம்பியிராமல் தங்கியிராமல் பொது மக்களும் இதில் சரிக்குச் சரி பங்கெடுக்க வேண்டும். அவ்வாறு அக்கறை காட்டினால் மட்டுமே குடாநாட்டில் அழிக்கப்பட்ட 25 லட்சம் பனைகளுக்கும் 10 லட்சம் தென்னைகளுக்கும் ஈடுசெய்ய முடியும்.

குடாநாட்டில் உள்ள சகல பிரதேச செயலகங்களிலும் மாதிரிப் பனந்தோட்டங்கள் உண்டாக்கப் படவேண்டும். அவை மாதிரித் தோட்டங்களாக மட்டுமன்றி நாற்று மேடைகள் தயாரிக்கப்பட்டு கன்றுகள் விநியோகிக்கப் பட்டால் பனை வளர்ப்பை ஊக்குவிக்கலாம்.

மழை காலத்தில் விதையை ஊன்றி சில மாதங்களுக்குக் கால்நடைகளில் இருந்து காப்பாற்றிவிட்டால் போதும். தானாகவே வளர்ந்து நெடிதுயர்ந்து கணக்கில்லாப் பயன்தருவது பனை. அதனை வெறும் வளவுகளிலும், வீட்டின் பின்புறங்களிலும், வயல் வரம்புகளிலும், வீதி ஓரங்களிலும் நட்டால் அதுதரும் நன்மைகள் நயங்கள் பலப்பல.

தெற்கிலிருந்து தேங்காயை எதிர்பாராமல் இந்தப் பிரதேசத்திலேயே குறிப்பாக தென்மராட்சிப் பகுதியில் தென்னையை பெரும் பயிராகச் செய்கை பண்ணினால் குடாநாட்டின் தேவையைக் கணிசமான அளவேனும் நிறைவேற்றலாம். பனையைப் போலவே குடாநாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் தென்னை உதவும்.

பனைகள், தென்னைகள் அழிந்துவிட்டன, அழிக்கப்பட்டுவிட்டன என்று சொல்வதால், வெறுவாய் சப்புவதால் ஆகப் போவது எதுவும் இல்லை, இரு மரங்களின் புனர்நடுகைகள் திட்டமிடப்பட்டு பரந்த அடிப்படையில் செய்யப்படவேண்டும். அப்போது தான் எதிர்காலச் சந்ததியினராவது அவற்றின் பயன்களைப் பெற இயலும், ஆக்கபூர்வமாகச் சிந்தித்து அறிவுபூர்வமாகச் செயற்படுவோமாக.

# திருவாசகமெனுந் தேனினை நமக்களித்த மணிவாசகர் பொற்றாள் எம் உயிர்த்துணையே!

இன்று மாணிக்கவாசக சுவாமிகளது குரு பூசைத் தினம் எட்டாம் திருமுறையாக விளங்கும் திருவாசகத்தையும், திருக்கோவையாரையும் அருளியவர் மாணிக்கவாசகர் ''தேனூறும் வாசகங்கள் அறுநூறும் திருக்கோவை நானூறும்'' என்பது முதியோர் வாக்கு.

மாணிக்கவாசகர் உள்ளமாகியபுலத்தினைப்பக்தியால் உழுதவர். ஞானத்தை வித்திட்டு, சிரத்தை நீர் பாய்ச்சி, கள்ளப்பொறியாம் களை களைந்து சிவானந்தம் விளைத்தவர்.

பாண்டிய நாட்டில் திருவாதவூரில் ஆதிசைவ மரபில் தோன்றிய இவரது இயற்பெயர் திருவாதவூரர். இவரது தந்தையார் சம்புபாதாசாரியார்; தாயார் சிவஞானவதி.

மாணிக்கவாசகர் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்குவதைக் கண்ட அரிமார்த்தன பாண்டிய மன்னன் அவரைத் 'தென்னவன் பிரமராயன்' என்னும் சிறப்புப் பெயரீந்து தனது அமைச்சராக்கிக்கொண்டான்.

பொன்னும் பொருளும் ஈந்து குதிரைகள் வாங்கிவருமாறு பணித்த மன்னவன் பணியை மேற்கொண்டு திருவாதவூரர் திருப்பெருந்துறையை அடைந்தார். அங்கே குருந்தமர நிழலிலே சீடர்களுடன் வீற்றிருந்த ஞானாசிரியரைக் கண்டார்.

குருவாக வந்த இறைவனின் சொற்படி தான் குதிரை வாங்கக்கொண்டு வந்த பொன்னையும் பொருளையும் தானமாகக்கொடுத்தார். இறைவனது திருவருளால் ஞானத்தைப் பெற்றார்.

வாதவூரரின் செய்கையை அறிந்த பாண்டியன் அவரை அழைத்து சிறையிலிட்டு வருத்தினான். வாதவூரர் இறைவனின் ஆணைப்படி ''ஆவணி மூல நாளன்று குதிரைகள் வரும்'' எனக் கூறினார்.

## ஞானக் கதிர்

குறித்தநாளில் சிவபெருமானே குதிரைவாணிபனாக வந்து குதிரைகளைப் பாண்டியனிடம் ஒப்படைத்தார். ஆனால் அன்றிரவே குதிரைகள் நரிகளாக மாறி ஊளையிட்டன. வேந்தன் மீண்டும் வாதவூரரை சிறையிலடைத்தான். இறைவன் அருளால் வைகையாறு பெருகியது.

வைகையாற்றுக்கு அணையிடுமாறு பாண்டிய மன்னன் பங்குகளைப் பகிர்ந்து விட்ட வேளை செம்மனச் செல்வி என அழைக்கப்படும் வந்தி என்னும் பிட்டு வாணிச்சியின் கூலியாளாக இறைவனே உருமாறிவந்து திருவிளையாடல் பல புரிந்து பாண்டிய மன்னனது பிரம்பால் அடிபட்டார். மன்னன் அடித்த அடி மன்னவன் மற்றும் மண்ணுயிர்கள் அனைத்து மீதும் பட்டது.

வாதவூரர் பொருட்டு இறைவன் செய்யும் திருவிளையாடலே இது என்பதை உணர்ந்த மன்னனும் மக்களும் இறைவனை வணங்கி வாதவூரரையும் பணிந்தனர்.

அதன் பின்னர் மாணிக்கவாசகர் தில்லை சென்று புத்தருடன் வாது செய்து வாதில் வெல்லும் பொருட்டுப் பிறவி ஊமையாக இருந்த ஈழவேந்தன் மகளைத் 'திருச்சாழல்' பாடிப் பேசுமாறு செய்தார்.

இறைவனே அந்தணர் உருவெடுத்து வந்து திருவாசகத்தை ஏட்டில் எழுதியதோடு பாவைபாடிய வாயால் கோவை பாடுமாறு பணித்துத் திருக்கோவையாரும் பாடச் செய்தார்.

பின்னர் தான் எழுதிய ஓலையின் இறுதியில் ''திருவாதவூரன் சொல்ல எழுதினேன் திருச்சிற்றம்பலமுடையானேன், இது என் கையெழுத்து'', என ஒப்பமிட்டுத் தில்லையம்பலப்படியில் வைத்து மறைந்தார். படி மீது சுவடியைக் கண்ட தில்லைவாழந்தணர்கள்இதற்குப் பொருளுரைக்க வேண்டும்'' என வேண்ட மாணிக்கவாசகர் இறைவன் திருவுருவைச் சுட்டி ''இவரே பொருள்'' எனக் காட்டி அங்கு எழுந்த சிவப்பெருஞ் சோதியில் கலந்து மறைந்தார்.

திருவாசகத்திற்கு உருகாதவர் ஒரு வாசகத்திற்கும் உருகார். திருவாசகத்தில் அமைந்துள்ள பாடல்கள் அனைத்தும் முதிர்ந்த பக்குவ நிலையில் வெளிப்பட்ட அனுபவப் பிழியலாகும். இதனால்

சமூகஜோதி
**கா. கணேசதாசன்**

''திருவாசகமென்னும் தேன் என்றும்'' திருவாசகமென்னும் தேனூறு கிளவி'' என்றும் கூறுவர்: திருவாசகம் உணர்ந்து பாட வேண்டிய ஒன்று. அதனை நமக்களித்த மணிவாசகர் தாள் பணிதல் எமது தலையாய கடமை.

இறைவனின் பெருங்கருணைத் திறமனைத்தையும், 'அம்மையே அப்பா ஒப்பிலா மணியே அன்பினில் விளைந்த ஆரமுதே'' ''பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும் புழுத்தலைப் புலையனேன்'' என்று குறிப்பிட்டுப் பாடுகின்றார். அவர் அடைந்த பக்திப் பரவச நிலையைத் திருவாசகத்தை உள்ளன்போடு ஓதுபவர்கள் மட்டுமே உணர முடியும்.

'அறிவாற் சிவனாகிய மணிவாசகர்' அருளிய திருவாசகத்தைப் பாராயண நூலாகவும் வழிபாட்டு நூலாகவுங் கொண்டு போற்றுவோமாக. ★

# கஞ்சா வைத்திருந்த நபருக்கு ஆறு மாத சிறைத் தண்டனை

யாழ்ப்பாணம், ஜூலை 16

கோப்பாய் பொலீஸாரினால் யாழ். நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட ஒரு கிலோ கஞ்சா யாழ். மேலதிக நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் முன்னிலையில் நீதிமன்ற ஊழியர்களினால் கடந்த செவ்வாயன்று அழிக்கப்பட்டது.

இது தொடர்பாக அரியாலையைச் சேர்ந்த மகேந்திரன் மதிவதனன் என்பவர் கோப்பாய் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு யாழ் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

கஞ்சா வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்ட இவருக்கு 5 ஆயிரம் ரூபா குற்றப் பணம் செலுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

குற்றப் பணம் கட்டத்தவறியமையினால் இவருக்கு ஆறு மாத காலச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

(இ-5)

## பாலர் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 16

நல்லூர் முத்தமிழ் பாலர் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1.30மணிக்கு கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை முன்றலில் பாடசாலை அதிபர் செல்வி சியாமளாதேவி சண்முகலிங்கம் தலைமையில் நடைபெற உள்ளது முதன்மை விருந்தினராக நல்லூர் பிரதேச சபை கணக்காளர் கில்பேட் குணமும் பாரியாரும் கலந்து கொள்வர். (ஐ)

## பொது அறிவுப் போட்டி

நெடுந்தீவு, ஜூலை 15

நெடுந்தீவுப் பாடசாலைகளுக்கிடையில் பொது அறிவு, கவிதைப் போட்டிகளை நடத்த அமரர் எஸ். திருநாவுக்கரசு கல்வி புலமைப் பரிசில் நிதியம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பாடசாலைகளுக்கிடையே மூன்று பிரிவுகளாக இவை நடத்தப்படும். நான்காவது பிரிவு திறந்த கவிதை, பொது அறிவுப்போட்டிகளாக நடைபெறும்.

முதலாவது பரிசு பெறும் மாணவர்களுக்கும் மாணவரின் பாடசாலைக்கும் ஊக்குவிப்புப் பரிசாகப் புத்தகங்களும்வழங்கப்படவுள்ளன.

போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் அமரர் திருநாவுக்கரசு நினைவு தினமான ஓகஸ்ட் முதலாம் திகதி வழங்கப்படும். போட்டிகள் எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறும்

(ஐ-111)

## நாளை

ஆடி 01

சனிக்கிழமை

திதி: பஞ்சமி

பின் இரவு 3.48 வரை

நட்சத்திரம்: பூரம்

முன் இரவு 8.11 வரை

ஸ்கந்த பஞ்சமி நாள்

சுபநேரம்: 3.00 – 4.30

ராகுகாலம்: 9.00 – 10.30

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

உனக்கு கர்வமுண்டாகுமானால் 'நான் இறைவனின் அடிமை, குழந்தை' என்ற நினைவுகளால் கர்வம் எழட்டும்.

— ஸ்ரீ இராமகிருஷ்ணர்

# கசிப்பு விற்பனை வழக்கில் இருவருக்குப் பிடியாணை

தென்மராட்சி, ஜூலை 16

சட்டவிரோத கசிப்பு விற்பனை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்ட இரு பெண்கள் நீதிமன்றுக்கு வராததால் சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் இருவருக்கும் பிடியாணை பிறப்பித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை (13/7) சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் நடைபெற்ற வழக்கு விசாரணைக்கு வருகை தராத கைதடியைச் சேர்ந்த வாரித்தம்பி சடைச்சி, மட்டுவில் சந்திரபுரத்தைச் சேர்ந்த சுந்தரலிங்கம் இராசமணி ஆகிய இருவருக்குமே பிடியாணை பிறப்பித்து ஜூலை 27 ஆம் திகதி விசாரணை நடைபெறும் என உத்தரவிட்டார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விசாரணையில் கொடிகாமம், கைதடி, மட்டுவில் ஆகிய பகுதிகளில் சட்டவிரோதமாகக் கசிப்பு, சோடா, கள் ஆகியவை வைத்திருந்தமைக்காகவும், விற்பனை செய்தமைக்காகவும் இருவருக்கும் சிறைத் தண்டனையும் அறுவருக்கு அபராதமும் விதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(ஐ-117)

## கோப்பாய் பகுதியில் மிதிவெடி

கோப்பாய், ஜூலை 16

கோப்பாய் — கைதடிப் பாலத்தில் நேற்று முன்தினம் மாலை ஐந்து மணியளவில் இடம்பெற்ற மிதிவெடிச் சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த சா. தனபாலசிங்கம் (வயது 36) என்பவரே காயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவத்தில் மாடு ஒன்று இறந்தது.

(இ-72)

# சனசமூக நிலையங்களுக்கு இவ்வருட உதவிப் பணம்

திருநெல்வேலி, ஜூலை 16

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் இயங்கி வரும் பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களுக்கு இவ்வருடத்திற்கான அரச நன்கொடைப் பணம் விரைவில் வழங்கப்படவுள்ளது.

வடக்கு—கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் இதற்கான நிதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

'ஏ' தரம் உள்ள சனசமூக நிலையங்களுக்கு ஆயிரம் ரூபாவும், 'பி' தரம் உள்ள சனசமூக நிலையங்களுக்கு 600 ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

இப் பிரிவில் இயங்கும் பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களின் நிர்வாகிகள் நிலைய வருடாந்தப் பொதுக் கூட்ட அறிக்கை, மாதாந்த கூட்ட அறிக்கை போன்ற ஆவணங்களைப் பிரதேச சபைத் தலைமைச் செயலகத்தில் உடனடியாகச் சமர்ப்பித்து இந்த உதவி நன்கொடைப் பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்தார்.

(ஐ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானப் பயணத்துக்குப் பாதுகாப்பு

# அனுமதி வழங்கப்பட்டோர் விவரம்

### யாழ்ப்பாணம்

எஸ். கந்தையா (099984 ஏ), இ. ரட்ணம் (099984 பி), ரி. சிவயோகம் (100000 ஏ), எஸ். றெரிமென்ற் (100115பி), ஜே. துரைநாயகம் (100167ஏ), ரீ. சபேசன் (100167பி) கே. தியாகலிங்கம் (100276ஏ), சீ. மாயசுதர்ஷன் (100276ஏ), கே. திருந்தி (100301ஏ), ஈ. பிள்ளையானந்தன் (100301 பி), எஸ் செல்வராஜா (100327ஏ), என். செல்வராஜா (100327பி), கே. சிவராசா (100345ஏ), என் சிவராசா (100345பி), எஸ். அன்ரனி (100359ஏ), எஸ். ஜெயச்சந்திரன் 100364ஏ), எம். தேவநந்தன் (100364 பி), கே. ரவி (100364சி), எஸ். செல்வநாயகம் (100364டி), எம், செல்வராஜ் (100365ஏ), எஸ். செல்வராஜ் (100365பி), சி. ஜே. மெறில்டா (100115ஏ),

எஸ். முத்துக்குமார் (100371ஏ),எம். பரமேஸ்வரி (100371பி),எவ். பத்திநாதர் (100377ஏ), எம் கவினா (100378பி), என். நடேஸ்வரி (100379 ஏ), ஜி. ஈஸ்வரதாசன் (100381 ஏ), என். நந்தகுமார் (100383ஏ), எஸ். பூபாலசிங்கம் (100385 ஏ), எஸ். ஸ்ரீபாலசிங்கம் (100385 பி), டி. ஆர். டி. எம். கெ,பி.ஹேரத் (100398 ஏ), கே. ராசதுரை (100405 ஏ), எஸ். பத்மதேவி (100408 ஏ), எஸ். பவளமலர் (100410 ஏ), எஸ். சிவஞானம் (100414 ஏ), வை. விக்னேஸ்வரி (100423 ஏ), எல். விக்னேஸ்வரி (100423 பி), எம். கெ. கொயன்ஸ்(100428 ஏ), எஸ். ஜெயபாலசிங்கம் (100438 ஏ), எஸ். டி. சன்கோ (100440 ஏ), ஏ. டி. அன்னராணி (100440 பி), டி. லபிறாஜினி (100440சி), ஜே.குணசிங்கம் (100445ஏ), இ. கிருஷ்ணவேலு (100447 ஏ), இ. நகுலன் (10047பி), ஆர்,சி. உதயகுமார் (100449 ஏ), ரி. கணபதி (100456ஏ),

இ. அப்புத்துரை [100460 ஏ], ஏ. கல்யாணி [100460 பி], வி. ரட்ணசிங்கம் [100460 சி], ஆர். சஞ்சி [100460டி],வி.செல்வக்குமார் [100467 ஏ], ஏ. கோமஸ் [100468 ஏ], கே. வேலுப்பிள்ளை [100480 ஏ], கே. அருந்தவமலர் [10 480 பி], எஸ்.இராசம்மா[100480பி], எஸ். ராமநந்தன் [100483 ஏ], இ. கதிர்காமநாதன் [100485 ஏ], வி. அனுஷ்பா [100488 ஏ], எ. சொய்சா [100488 பி], ரி. இரியம் ]100491 பி], எம். ஜோசப் [100492 ஏ], ஜே. தங்கரட்ணம் [100492 பி], எ. சறத் டெனு [100497 ஏ], எஸ். கதிரவேற்பிள்ளை [100498 ஏ]. ஏ. ஜேமிஸ் [100501ஏ], டி.சி, திரேசா [100501 பி], ஆர்.நிரோஜினி [100501சி], டி. ஜே. மேனஸ் [100502ஏ], டி. ஜே. டண்ஸ்ரன் [100503 ஏ], எஸ். வரதராஜா [100512 ஏ],

எம். சாந்தன் (100516ஏ), எம் அருளணியம் (100516 பி), எம். அழகசாமி [100516 சி], கெ. சறோஜினி [100523 ஏ], எம். நீற்றம்மா [100524 ஏ], வி. ஜோசிஸ் [100526 ஏ], எஸ். ருத்ரகுமரன் [100528ஏ], கெ. குண்டுமணி [100528பி], கெ. சிவநந்தன் [100536ஏ]. ஆர். கணபதிப்பிள்ளை [100543ஏ], பி. சோதிலிங்கம் [100544ஏ], எஸ். மனோன்மணி [100544 பி], ரி. கெ. வல்லிபுரம் [100546ஏ], வி. சறோஜினி தேவி [100546பி], ஜெ. திரேசம்மா [100547 பி], எஸ். ஞானம்மா [100547சி], ரி. தவராசா [100561ஏ], ஆர். வேலுப்பிள்ளை [100561பி], கெ. பூபாலசிங்கம் [100562 ஏ], பி. கமலாதனா [100562 பி], சி பிறேமலக்ஷலா [100567ஏ], கெ. கிருஷாந்தன் [100567பி], எஸ். ஹரீந்திரன் [10056 ஏ], எம். எஸ். குமார் [100573ஏ], எம். ஜிமான் [100573 பி]

இ. ஞானசம்பந்தன் (100575 ஏ), எம். பிரபாகரன் (100575 பி), எஸ். துரைசிங்கம் (100580 ஏ), டபிள்யு. எ. ஆர் ஜெபமணி (100584 ஏ), என். ரீ. எஸ். விஜயநாயகம் (100584 பி), ஆர். டபிள்யூ. பாலகந்தன் (100592 ஏ), ரி. மலர் (100593 ஏ), பாபுதவராஜா (100594 ஏ), பி. வைத்திபம்பாபு (100594பி), வசந்தினி பாபு (100594 சி), பி. ரகுசனா (100594 டி). எஸ். சுந்தரலிங்கம் (100595 ஏ), எல். செபஸ்திபம்மா (100599 ஏ), எ. யு. புத்திரன் (100600 ஏ). யு. யோகவை (100600 பி), பி. கணேசமூர்த்தி (100601 ஏ), எஸ். ரஜித்தா பாலன்(100608ஏ), ரி. சிவகுரு (100609 ஏ), சி.சிலுவைராஜா(100610ஏ), எம். கிறிஸ்லூசம்மா 100612 ஏ), எ. லிபோ (100613ஏ), மனவல்லியோ (100613 பி,) எம். பாக்கியானந்தன் (100615ஏ), பி.தனபாலரட்ணம் (100619 ஏ), ரி. தனபாலசிங்கம் (100619பி) கே. ராஜேந்திரன் (100621 ஏ) ஆர், வினிதா (10 621 பி)

எம்.திருனாவேலு (109632 ஏ). எஸ். கனகலிங்கம் 100635 ஏ), பி. நடராசா 100635 பி), கே. சசிகரன் 100635 சி), கே. சண்முகராஜா 100638 ஏ), எஸ். கலைமகள் (100638 பி) கே. கருணாகரன் (100639 ஏ) வை. நடனி (100639 பி) எஸ் திரேசம்மா 100648ஏ), வி ராமலிங்கம் (100653ஏ) வி ராமலிங்கம் (100653பி), ரி. ராமரட்ணம் (100653சி). ரி. செந்தூரன் (100653டி) எஸ்உஹெனபால) (100662 ஏ). எஸ். சண்முகம் (10066 பி), எஸ் இராசதுரை (100665 ஏ), கே. சித்ரன் (100665 பி), ஜே. மயில்வாகனம் (100669 ஏ). கே. சந்திரலிங்கம் (100675 ஏ) சி. சிறிநிமால் (100675 பி), சி. அந்தோனிப்பிள்ளை (100676 ஏ), எ. பிரான்சிபா (100676 பி), கே. போகேந்திரன் (100680ஏ), வி. சுசிலா தேவி (100682 ஏ), ரி நாகனி (100686 பி), ரி கீதா (100686 சி)

எஸ். வேல்மாறன் 100687] ஏ], எஸ் லீலாவதி [100687 பி], கே. தம்பை [100692 ஏ], ஏ. றிச்சட் [100694ஏ], எஸ் கணேசமூர்த்தி [100696 ஏ], ஈ கே. லக்சுமிதேவி 100698 ஏ], கே. கதிரருபன் [100698 பி]. ஜெ சி வொலன்ரினி [100702 ஏ], கே. சிவநலம் [100703 ஏ], எஸ். இன்பனி [100706 ஏ], எஸ். சாருகா [100706 பி], ஆர் வினிதா [100708 ஏ], ஜே. சோமசுந்தரம் [105710 ஏ], இ சிவரட்ணம் [100715 ஏ], பி. லோகேஸ்வரி [100725 ஏ], பி. பெர்னாண்டோ [100725 பி], ஏ. சண்முகநந்தன் [100727 ஏ], யு. சிறீகந்தன் [100728 ஏ]. சுகலியா [100728 பி], எ. டி. என் அன்ரனி [100733 ஏ], எஸ். கோபாலசுந்தரன் [200735 ஏ], என். தங்கவேலு [100736 ஏ], எம் ரட்ணசபாபதி [100741 ஏ], ஆர். வேணுகநாதன் [100742 ஏ], பி. வேணுகநாதன் 100742 பி], எஸ். குணநாயகம் [100715 ஏ].

வி சசிகா (100742சி), எம்.மகேஸ்வரன்(100744ஏ), எஸ். மயில்வாகனம் (1007). பி), எம். நரேஸ் (100744சி44 ரி. பாலசூரியன் (100754ஏ), எஸ்.கே.மரியம்மா(10096266 ஏ), ஜெ. எம். லீலாமலர் 10096266பி), ஜெ. எம். எவ். தர்ஷிகா (10096266சி), ஜெ. எம். பிரகாசன் (10096266 டி), ஆர். தேவராஜா (101477ஏ), எம் சச்சிதா (101727ஏ), வி. தர்மராஜ் (102238ஏ), என். தர்மராஜ் (102238பி), வை. எழிலரசி (10223ஏ9), வை. சந்திரவதன் (102241ஏ), ஜெ வை. ரட்ணம் (102243ஏ), எஸ். சர்மிலா (102247ஏ), ஜெ. குணசிங்கம் (102248ஏ), வி. அருளானந்தன் (102248பி), டி. குமரஞ்சனி (102249ஏ), எஸ்.பி. சிபரன் [102250ஏ], ரி. முருகேசு [102251ஏ], வை. பி. மேரிசுனிதா [102252ஏ], வி. றெஜிநமார் [102253ஏ],எஸ். தேவராஜா [102254ஏ], கே புஸ்பலதா [102255ஏ], எஸ். சசிகுமார் [102255பி], எஸ் கனேராஜா [102255சி], வை. கே. மெக்டலின் [102256ஏ], எஸ். மேரி அன்ரறி [102257ஏ]. ரி ஜானகி [102258ஏ], வி திருபாசுந்தரம் [102259ஏ], வி. றாவினி [102261ஏ].

## காரைநகரில் ஐ.நாவின் உதவி; கிராமிய வங்கி ஊடாக கடன்

காரைநகர், ஜூலை 16

காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிராமிய வங்கி ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தில் ஒரு தொகைப் பணத்தை சுழற்சி முறைக் கடனாகப் பெற்று சுயமுயற்சியில் ஈடுபடும் அங்கத்தவர்களுக்கு குறைந்த வட்டியில் வழங்கவுள்ளது.

சுமார் 10 லட்சம் ரூபாவை மேற்படி சங்கம் கடனாகப் பெறவுள்ளது. சுயமுயற்சித் தொழிலை ஊக்குவிக்கும் பொருட்டு 5 ஆயிரம் ரூபா முதல் 50 ஆயிரம் ரூபாவரை அங்கத்தவர்களுக்கு 12 சதவீத வட்டியில் கடன் வழங்கப்படவுள்ளது.

விவசாயம், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு, உணவு பதனிடல், சிறு கைத்தொழில், வியாபாரம் பேன்ற சுயதொழில் முயற்சிகளுக்கே இக்கடன் திட்டம் மூலம் உதவி வழங்கப்படவுள்ளது

இதற்கான விண்ணப்பங்கள் காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிராமிய வங்கியினால் கோரப்பட்டுள்ளன. (ஐ-73)

## கூட்டம்

காரைநகர், ஜூலை 16

ஊர்காவற்றுறை பிரதேசத்தில் அமைக்கப்பட்ட நீர் விநியோகத் திட்டங்களை பராமரித்தல் சம்பந்தமான பொதுக்கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை மு. ப. 11.30 மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற உள்ளது. (ஐ-73)


## வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாண மாவட்டச் செயலக ஓய்வூதியக் கொடுப்பனவுக் கிளையில் பல வருடங்கள் பிரதம எழுதுநராகச் சேவை புரிந்து தனது அறுபதாவது அகவையில் 1999-07-16 ஆம் திகதி ஓய்வு பெற்றுச் செல்லும்

திருமதி

**நேசமணி கேதாரநாதன்**

அவர்களின் தன்னலமற்ற சேவையைப் பாராட்டுவதுடன் அவர் சகல செல்வங்களும் பெற்று நீடுழி காலம் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

கணக்காளரும்,
ஓய்வூதியக் கொடுப்பனவு,
ஓய்வூதியக் கணிப்புக் கிளைகளின்
சகல உத்தியோகத்தர்களும்.

(67486)


## மாணவருக்குப் போட்டி

காரைநகர், ஜூலை 16

காரைநகர் வாரிவளவு நல்லியக்கச் சபை நடத்தும் காரை– முன்பள்ளி மாணவர்களுக்கிடையிலான கொன்றை வேந்தன் போட்டி நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு காரைநகர் போரூட் காரியாலயத்தில் நடைபெற உள்ளது.

மேற்படி சபை முன்பள்ளி மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கும் முகமாக மாதாந்தம் கல்வி ஊக்குவிப்புப் போட்டிகளை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. [ஐ-73]

## புதிய நூலகம்

திருநெல்வேலி, ஜூலை 16

கோண்டாவில் சந்திக்கு அருகில் புதிய நூலகம் ஒன்றை விரைவில் திறப்பதற்கு நல்லூர் பிரதேசசபை நடவடிக்கை எடுத்து வருகின்றது. இதற்கான கட்டடம் இரண்டரை லட்சம் ரூபா செலவில் நிறுவப்பட்டுள்ளதாக சபையின் செயலாளர் தெரிவித்தார்.

இதேவேளை —

நல்லூர் பிரதேச சபைப் பகுதியிலுள்ள சனசமூக நிலையங்களுக்கு வழங்குவதற்காக ஒரு லட்சம் ரூபா பெறுமதியான புதிய நூல்கள் கொழும்பில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் விரைவில் இந்த நூல்கள் கப்பல் மூலம் இங்கு கொண்டு வரப்பட்டு சனசமூக நிலையங்களுக்கு விநியோகிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-135)


## தேவை

தொலைத் தொடர்பு நிலையத்தில் பணி செய்ய படித்த அனுபவமுள்ள பெண் ஒருவர் உடன் தேவை நேரில் வரவும்.

**மயூர பிரகாஷ் தொலைத் தொடர்பகம்**

பாடசாலை வீதி,
மாதனை, பருத்தித்துறை.
தொலைபேசி இல. 070-212446

(67497)

இந்தியாவின பராஸ பார்மசூடடிகல்ஸ் அறிமுகப்படுத்தும்

வின்டர் ஷீல்ட்




இறக்குமதி செய்து சந்தைப்படுத்துவோர்
பாம்கோ மார்க்கட்டிங் சர்விசஸ் (பிரைவேட்) லிமிட்ட
தொலை பேசி 436447, 939147

யாழ்ப்பாணத்தில் எமது ஏக விநியோகத்தர்
ஜெகன் மருந்தகம் 462/B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
மற்றும் யாழ்ப்பாணமெங்குமுள்ள மருந்தகங்கள் பல் பொருள் வணிக நிலையங்கள், அழகு சாதன கடைகள், சில்லறை கடைகள்

(சி/8058)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மணியில் புதைகுழி...

(முதலாம் பக்கத் தொடர்)

விசாரணைகளை மேற்கொள்ளல் தொடர்பான கால அட்டவணை ஒன்றை அரச சட்டவாதி யசந்த கொத்தாக்கொட நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார். புதைகுழி தோண்டும் பணி செப்ரெம்பர் 6 ஆம் திகதி ஆரம்பிக்கும் என அந்த அட்டவணையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தக் கால அட்டவணைப்படி இந்த நடவடிக்கையை மேற்கொண்டால் புதைகுழி தோண்டும் பணி தாமதமாகிக்கொண்டுபோவதாகவும்—

விரைவாக புதைகுழிகளைத்தோண்டி உண்மையை வெளிக்கொணர்ந்து மக்களுக்கு நீதியின்பால் நம்பிக்கையூட்டும் செயல் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும்— நீதிவான் தெரிவித்தார்.

அரச சட்டவாதி சமர்ப்பித்த கால அட்டவணை தொடர்பாக நீதிவானுக்கும் அரச சட்டவாதிக்கும் இடையில் வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

விஞ்ஞான முறையில் ஆய்வுகளை மேற்கொள்ள நிபுணர்களின் சேவையைப் பெற வேண்டிய தேவை, தோண்டும் பணி இடம்பெறும்போது வழங்கப்படவேண்டிய பாதுகாப்பு ஒழுங்குகள் ஆகியன தொடர்பாக அரசசட்டவாதி தெரிவித்த காரணங்களை இறுதியில் ஏற்றுக்கொண்ட நீதிவான் தோண்டும் பணி செப்ரெம்பர் 6 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து அந்த மாதம் 30 ஆம் திகதி வரை நடைபெறும் என்று அறிவித்தார்.

இந்தக் காலப்பகுதியில் தோண்டும் பணிகள் இடம்பெற சகல ஏற்பாடுகளையும் செய்யுமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

தோண்டும் பணிகளை குறிப்பிட்ட காலத்தில் மேற்கொள்ள வசதியாக செம்மணியில் பூர்வாங்க நடவடிக்கைகளை ஆரம்பிக்கவும்—

புதைகுழி இருப்பதாகத் தெரிவித்த இடங்களை அடையாளம் காட்டவும் — அடுத்த மாதம் 30 ஆம், 31 ஆம், செப்ரெம்பர் முதலாம் திகதிகளில் விசாரணைகள் யாழ். நீதிமன்றத்தில் இடம்பெறும் என்றும் நீதிவான் அறிவித்தார்.

இந்தப் பணிகளுக்கு வசதியாக கிருஷாந்தி கொலை வழக்கு மரணதண்டனைக் கைதிகளான சோமரத்ன ராஜபக்ஷ, ரி. எம். ஜெயதிலக, ஜி. பி. பிரியதர்ஷன, ஜே எம். ஜெயசிங்க, ஏ. எஸ். பெரேரா ஆகியோரை அடுத்த மாதம் 30 ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 30 ஆம் திகதி வரை யாழ். சிறைச்சாலையில் வைக்க ஏற்பாடு செய்யுமாறு சிறைச்சாலை ஆணையாளருக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

அத்துடன் பிரஸ்தாப கைதிகளிடம் வாக்குமூலம் பெறுவதற்கு குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு அனுமதி வழங்குமாறும் சிறைச்சாலை ஆணையாளருக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

அடுத்தமாதம் 30 ஆம்திகதி முதல் இடம்பெறும் விசாரணைகள் மற்றும் ஆய்வுப்பணிகளில் சமுகம் தருமாறு சட்ட வைத்தியத்துறைப் பேராசிரியர் சந்திரசிறி நெரியல்ல, மண்ணியல் நிபுணர் கே. ஏ. நந்தசேன, இரசாயனப்பகுப்பாய்வாளர் ஆனந்த மெண்டிஸ்ஆகியோருக்கும் நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

யாழ். நீதிமன்றத்தில் சோமரத்ன ராஜபக்ஷ அளித்த வாக்கு மூலத்தில் குறிப்பிட்ட படை அதிகாரிகள் மற்றும் பொலீஸார் குடாநாட்டுக்கு வெளியே செல்லாமல் பார்க்க வேண்டும் என்றும்—

யாழ்ப்பாணத்திலோ அல்லது வெளியிலோ மேற்கொள்ளப்படும் விசாரணைகளுக்கு அவர்களால் அச்சுறுத்தல் ஏற்படாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும்—

இந்த விசாரணைகளில் சாட்சியம் அளிப்பவர்கள் மற்றும் முறைப்பாட்டுக்காரர்கள் ஆகியோருக்கு அவர்களால் அச்சுறுத்தல் ஏற்படாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும்—நீதிவான் வடபிராந்திய படைத்தளபதி மற்றும் பொலீஸ் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இந்த வழக்கில் அரச தரப்பில யசந்த கொட்டாக்கொட ஆஜரானார்.

காணாமற்போனோர் பாதுகாவலர் நலன்களை கவனிக்க சட்டத்தரணிகள்க. கேசவன், எஸ். பத்மராஜா, ஆர். ஜெயசிங்கம், வி. தவபாலன், திருமதி இளங்கோவன், எஸ். ராதாகிருஷ்ணன் ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

பொலீஸார் தரப்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளர் கீர்த்தி கஜநாயக்க ஆஜராகியிருந்தார்.

நேற்றைய விசாரணையையொட்டி நீதிமன்றப் பகுதிகளில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. (இ-3-5)


## ST. PATRICK'S COLLEGE OLD BOYS' ASSOCIATION

தவிர்க்க முடியாத காரணங்களால் 18 - 7 - 99 ஞாயிறு நடைபெறவிருந்த வருடாந்தப் பொதுக் கூட்டமும் அது தொடர்பாக இன்று (16 - 07 - 99) நடைபெறவிருந்த செயற்குழுக் கூட்டமும் பின்போடப்படுகின்றன. மறு திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

வி. பெனடிக்ற்
செயலாளர்

பழைய மாணவர் சங்கம்,
சென். பற்றிக்ஸ் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(சி/8204)



உ
சிவமயம்

அராலி வண்ணப்புரம்

## ஸ்ரீ விசாலாக்ஷி அம்பாள் சமேத விஸ்வநாதேஸ்வரர் தேவஸ்தான வழிபடுவோர் சபையின்

## பொதுக் கூட்டம்

நிகழும் பிரமாதி ஞு ஆனி மீ 30 ஆம் திகதி (14 - 07 - 99) பிற்பகல் 4 மணி வரையில் தேவஸ்தான மண்டபத்தில் பரிபாலன சபைத் தலைவர் திரு. வி. செல்வரத்தினம் J P அவர்கள் தலைமையில் வழிபடுவோர் சபையின் பொதுக் கூட்டம் நடைபெற்றது. வலி. மேற்குப் பிரதேசசபைத் தலைவர் திரு. ந. திரிலோகநாதன் J.P.U.M அவர்களும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

பொருளாளர் அறிக்கை வாசிக்கப்பட்டது. பிரதம விருந்தினர் திரு. ந. திரிலோகநாதன் (ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி) அவர்கள் வருகின்ற ஆனி மீ மஹோற்சவம் நடைபெற வேண்டும் எனவும் அதற்கு தம்மாலியன்ற உதவியும், ஒத்துழைப்பும் தருவதாக உறுதி மொழி கூறினார். அதன் பின்பு மகா சபையினரின் வேண்டுகோளுக்கிணங்க புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது. பின்வருவோர் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. கா. குமாரசாமி
உப தலைவர்: திரு. வி. செல்வரத்தினம் J. P.
செயலாளர்: திரு. க. இரத்தினசிங்கம்
உப செயலாளர்: திரு. ச. மோகனதாசன்
பொருளாளர்: திரு. க. சிவசுப்பிரமணியம்

மேலும் பன்னிரண்டு நிர்வாக சபை உறுப்பினர்களும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

கா. குமாரசாமி
தலைவர்

க. இரத்தினசிங்கம்
செயலாளர்

க. சிவசுப்பிரமணியம்
பொருளாளர்

(67504)


## எலும்புக் கூடுகளில்...

(முதலாம் பக்கத் தொடர்)

கொண்ட ஆய்வு அறிக்கை நேற்று யாழ். நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதில்தெரிவிக்கப்பட்டுள்ள முக்கியவிடயங்கள் வருமாறு:

மீட்கப்பட்ட இரு எலும்புக்கூடுகளையும் அடையாளம் காட்டிய அவர்களது உறவினர்கள் தெரிவித்த தகவல்களின் அடிப்படையில் அவை மகேந்திரன் பாபு, இராசையா சதீஸ்குமார் ஆகியோரது என ஆய்வு மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

சதீஸ்குமாரை தலையில் அடித்ததன் மூலம் அவரது மூளையில் காயம் ஏற்பட்டு அவருக்கு மரணம் சம்பவித்துள்ளது. மொட்டையான ஆயுதத்தால் அவர் தாக்கப்பட்டுள்ளார் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அடிகள் அவரது உடலில் வீழ்ந்துள்ளன.

பாபு மகேந்திரனின் முகத்தில் இடதுபக்கத்தில் அடித்ததன் காரணமாக அவருக்கு மரணம் ஏற்பட்டுள்ளது எனச் சந்தேகிக்கப்படுகின்றது. அவர் தொடர்பாகக் கிடைத்த தகவல்களைக் கொண்டு மரணத்துக்கான முழுக்காரணத்தையும் கண்டு பிடிக்கமுடியவில்லை.

இந்த இரு எலும்புக்கூடுகள் தொடர்பான மரபணுப் பரிசோதனை மேற்கொள்ளப் படவிருக்கின்றது. அதன் பின் மரணம் தொடர்பான முழு விடயங்களையும் கண்டுபிடிக்க முடியும்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த எலும்புக்கூடுகள் இருக்கும் இடத்தைக் காட்டிய சோமரத்ன ராஜபக்ஷ நீதிமன்றத்தில் அளித்த வாக்குமூலத்தில் பிரஸ்தாப நபர்கள் இருவரும் துப்பாக்கியாலும், பொல்லாலும் அடித்துக் கொல்லப்பட்டதாகக் கூறியமை குறிப்பிடத் தக்கது. (இ-3-5)

# புதைகுழி...

(முதலாம் பக்கத் தொடர்)

குக் கைதியான சோமரத்ன ராஜபக்ஷ கடந்த மாதம் 16 ஆம் திகதி இந்த நீதிமன்றத்தில் அளித்த வாக்கு மூலத்தில் புதைகுழி உள்ள 10 இடங்களைக் காட்ட முடியும் என்று தெரிவித்தார். பின்னர் அவர் ஓர் இடத்தைக் காட்டினார்,

அங்கு தோண்டிய போது இரு எலுக்புக் கூடுகள் கைப்பற்றப்பட்டு அவை மறுநாள் அடையாளம் காணப்பட்டன. அவர் சரியான இடத்தைக் காட்டினார் என்பது இதன்மூலம் உறுதியாகியுள்ளது.

ஆனால் இந்த விடயம் சரியாக முன் எடுக்கப்படவில்லை. ஏன் காலதாமதம் காட்டப்பட்டது?

1998 ஆம் ஆண்டு ஜூலை மாதம் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் கிருஷாந்தி கொலை வழக்கு தீர்ப்பு வழங்கப்பட்டபோது மரணதண்டனை விதிக்கப்பட சோமரத்ன ராஜபக்ஷ செம்மணிப் புதைகுழி தொடர்பான தகவல்களை வெளியிட்டிருந்தார்.

ஆனால் இந்த வருடம் ஜனவரி மாதம் 7 ஆம் திகதியே இது தொடர்பாக யாழ். நீதிமன்றத்தில் 'பி' றிப்போட் சமர்ப்பிக்கப்பட்டது. தொடர்ந்து இது தொடர்பாக விசாரணைகள் நடைபெற்ற போதும், கடந்த மாதம் 16 ஆம் திகதியே முதலாவது புதைகுழி தோண்டப்பட்டது. இந்த தாமத நிலை ஏன் என்பது தான் நீதிமன்றுக்கு தெரியாத விடயமாகவுள்ளது.

ஒரு வருடத்துக்கு முன்னர் கொழும்பு நீதிமன்றத்தில் தெரிவித்த தகவலை வைத்து 99 ஜனவரியில் யாழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த 'பி' றிப்போட்டில் சோமரத்ன ராஜபக்ஷவுடன்மரணதண்டனைக் கைதிகளான ஜெயதிலக, பிரியதர்ஷன, ஜெயசிங்க, பெரேரா ஆகியோரிடமும் வாக்குமூலம் பெறப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது

ராஜபக்ஷ தனது வாக்குமூலத்தில் புதைகுழியையும் மற்றும் காணாமற்போனோரின் மோட்டார் சைக்கிள், சைக்கிள்கள் ஆகியவற்றையும் காட்ட முடியும் என்று கூறியுள்ளார். அவரது வாக்குமூலம் குறித்து விசாரிக்க ஆறு மாத காலம் சென்றது ஏன்?

மீண்டும் இன்று மேலும் கால அவகாசத்தை அரச சட்டவாதி கோருகின்றார். கடந்த மாதம் 16 ஆம் திகதி புதைகுழி தோண்டிய பின்னர் விசாரணைகளை ஆரம்பித்திருந்தால் ஏன் மீண்டும் கால அவகாசம் தேவை?

கடந்த மாதம் 16ஆம் திகதி ராஜபக்ஷ இந்த நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளித்த போது தன்னுடன் குற்றவாளியாகத் தீர்க்கப்பட்ட பெரேரா புதைகுழி உள்ள 5 இடங்களைக் காட்டத் தயாராக இருப்பதாகக் கூறினார் எனவும் மற்றொரு குற்றவாளியான ஜெயதிலகவும் புதைகுழி இருக்கும் இடங்களைக் காட்டத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார் எனவும் கூறினார்.

அந்த வாக்கு மூலங்களின் அடிப்படையில் அந்த இருவரையும் விசாரிக்க அன்று ஏன் நீதிமன்றத்தில் மனு சமர்ப்பிக்கவில்லை? இன்று தான் மனு சமர்ப்பிக்கப்படுகிறது. ஏன் இந்த தாமதம்?

நீதிவான் என்ற முறையிலும்— இந்த நாட்டின் நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்ற முறையிலும் — மக்கள் நீதித்துறையில் நம்பிக்கை கொள்ள வைக்கும் முறையிலும்— இந்த நீதிமன்றம் செயற்படவேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

பொது மக்களினால் ஆவலாக எதிர்பார்க்கப்படும் இது போன்ற விடயங்களில் சட்டமா அதிபர் திணைக்களமும் குற்றப்புலனாய்வுத் துறையினரும் மிகக் கவனமாகச் செயற்பட வேண்டியது அவசியமாகும்.

செம்மணிப் பிரதேசம் குடியிருப்புப் பிரதேசம் அல்ல. கடும்மழை ஒருநாள் பெய்தாலும் போதும், தோண்டும் பணிக்காக மேலும் 6 மாத காலம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படும் என்பதை உணரவேண்டும்.

இனியும் காலதாமதம் காட்டாமல் குறிப்பிட்ட காலப் பகுதியில் தோண்டும் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். இதற்கான சகல பொறுப்புகளையும் சட்டமா அதிபர் திணைக்களம் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

இப்படி நீதிவான் தெரிவித்தார். (இ-3-5)

# கால அவகாசம்...

(முதலாம் பக்கத் தொடர்)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

செம்மணியில் மேலும் சடலங்கள் உள்ளனவா என்பதை விஞ்ஞானரீதியில் ஆய்வுமேற்கொள்ள கால அட்டவணை ஒன்றைத் தயாரித்துள்ளோம்.

16-7-99 முதல் 11-8-99 வரை இந்தச்சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்களை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை செய்வர். காணாமற்போனோர் தொடர்பாக முறைப்பாடு செய்தவர்கள் விசாரிக்கப்பட்டு விவரங்கள் சேகரிக்கப்படும்

20-7-99 முதல் 11-8 99 வரை இந்த சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்களிடம் இருந்து சம்மத வாக்குமூலங்கள் பெறப்படும்.

இந்தப் பணிகளில் இரு குழுக்கள் ஈடுபடும்.

26-7-99 முதல் 11-8-99 வரை கிருஷாந்தி கொலை வழக்கு மரண தண்டனைக் கைதிகளான சோமரத்ன ராஜபக்ஷ, ஜெயதிலகா, பிரியதர்ஷன, ஜெயசிங்க, பெரேரா ஆகியோரின் வாக்குமூலங்களை குற்றப்புலனாய்வுத் துறையினர் பதிவு செய்வர்.

12-8-99 முதல் 17-8-99 வரை தோண்டும் பணிகளை விஞ்ஞான முறையில் செய்வதற்கான வசதிகள் செம்மணியில் ஏற்படுத்தப்படும்.

30-08-99 முதல் 01-09-99 வரை மரண தண்டனைக் கைதிகள் ஐவரையும் நீதிமன்றத்தில் விசாரிக்க வேண்டும்.

06-09-99 முதல் 30-09-99 வரை தோண்டும் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்தக் கால அட்டவணைப்படி இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள நீதிமன்றம் அனுமதியளிக்க வேண்டும்.

சோமரத்ன ராஜபக்ஷ தெரிவித்தபடி அரியாலைப் பகுதியில் உள்ள புதைகுழிகள் படையினரின் காவலரண் பகுதிக்குச் சமீபமாக உள்ளன. அந்தப் பகுதிகளில் மிதிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன. அவற்றைப் படையினரின் உதவியுடன் மீட்க வேண்டும். அதற்குக் கால அவகாசம் தேவையாக உள்ளது.

செம்மணிப் பகுதியிலுள்ள புதைகுழிகள் மழை காலத்துக்கு முன்னர் தோண்டி முடிக்கப்பட்டுவிடும்.

வளிமண்டலத் திணைக்கள பணிப்பாளர் ஜெயதிலக பண்டாரவுடன் தொடர்புகொண்டிருந்தோம். ஒக்ரோபர் ஆரம்பம் வரை வடக்கில் மழை பெய்ய மாட்டாது என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஆகவே மழைக் காலத்துக்கு முன்னர் இந்தப் பணியை முடிக்கலாம் என நம்புகின்றேன்.

இந்தப் பணிகளில் குற்றப் புலனாய்வுப் பிரிவை சேர்ந்த இருபது பேரும், சட்ட வைத்தியத்துறையைச் சேர்ந்த 10 பேரும், அரசாங்கப்பகுப்பாய்வாளர் இருவரும், மண்ணியல் நிபுணர் ஒருவரும் ஈடுபட

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஐ. தே. க. ஊர்வலத்தைக் கலைக்க பொலீஸார் தடியடி, கண்ணீர்ப்புகை!

## 4 எம். பிக்கள் காயம்

கொழும்பு, ஜூலை 16

**நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்கக் கோரி ஐ. தே. க. நேற்று ஏற்பாடு செய்த ஊர்வலத்தைக் கலைப்பதற்காக பொலீஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்து தடியடிப் பிரயோகம் நடத்தினர்.**

**இந்தச் சம்பவத்தில் ஐ. தே. கவின் 4 நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் 6 செய்தியாளர்கள் உட்பட 30 பேர் காயமடைந்தனர்; பல வாகனங்களின் கண்ணாடிகள் நொருங்கின.**

ஐ. தே. க. ஏற்பாடு செய்த ஊர்வலங்கள் பொரளை, மருதானை, ஹவ்லக் ரவுண் ஆகிய இடங்களில் இருந்து பிற்பகல் 2-30 மணிக்கு ஆரம்பமானது.

மூன்று பிரிவாக ஆரம்பிக்கப்பட்ட இந்த ஊர்வலங்களை மாநகர சபையில் இணைத்து அலரி மாளிகை வரை நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது.

மருதானையில் ஆரம்பிக்கப்பட்ட ஊர்வலம் சொற்ப தூரத்திலேயே பொலீஸாரால் கலைக்கப்பட்டது. கலைந்து சென்றவர்கள் வேறு பாதைகளால் மாநகர சபையை அடைந்தனர்.

பொரளையில் ஆரம்பித்த ஊர்வலத்தைப் பொலீஸார் மறித்த போதும் அந்தத் தடையை மீறி ஊர்வலக்காரர்கள் மாநகர சபையை அடைந்தனர்.

ஹவ்லக் ரவுனில் ஆரம்பமான ஊர்வலத்தை இடைநடுவில் பொலீஸார் மறித்த போதும் அந்தத் தடையை மீறி அவர்களும் மாநகர சபையை வந்தடைந்தனர்.

மாநகர சபையில் இருந்து அலரி மாளிகை நோக்கி ஊர்வலம் புறப்படவே, வாகனங்களில் வந்தபொலீஸார் அவர்கள் மீது கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசினர். குழாய் மூலம் தண்ணீரை அவர்கள் மீது பாய்ச்சினர். தடியடிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

இதனால் ஊர்வலத்தில் வந்தோர் சிதறி ஓடினர்.

ஆத்திரம் கொண்ட ஊர்வலக்காரர்கள் பொலீஸார் மீது கற்களை வீசினர்.

இந்தத் தாக்குதல் சம்பவங்களில் முன்னாள் அமைச்சர்களான ரேணுகா ஹேரத், சுனித்த ஜெயசிங்க ஆகியோர் காயமடைந்து கொழும்பு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

காயமடைந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான ஏ. எச்.எம். அஸ்வர், காமினி லொக்குகே, இம்தியாஸ் பாக்கீர் மாக்கர் ஆகியோர் தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

படுகாயமடைந்த ஆறு பத்திரிகையாளர்கள் உட்பட 30க்கு மேற்பட்டோர் கொழும்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றனர்.

தாக்குதல் சம்பவத்தின் போது ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட சிரேஷ்ட தலைவர்கள் அங்கு இருந்த போதும் காயமின்றித் தப்பினர்.

ஆங்கில, சிங்களப் பத்திரிகைகளின் செய்தியாளர்கள் மற்றும் படப்பிடிப்பாளர்களின் கமெராக்களை பறித்த பொலீஸார் அவற்றைச் சேதமாக்கியதாகக் கூறப்பட்டது.

சட்டவிரோதமாக நடத்தப்பட்ட ஊர்வலத்தையே தாங்கள் கலைத்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

(இ-3-6)

## கிளைமோர் குண்டு மீட்பு

சாவகச்சேரி, ஜூலை 16

சாவகச்சேரி பெரியமாவடிப் பகுதி பேரம்பலம் வீதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் கிளைமோர் குண்டு ஒன்று நேற்றுக்காலை 10.00 மணியளவில் படையினரால் கண்டு பிடிக்கப்பட்டு வெடிக்க வைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது, (இ-31)

## 2 சடலங்கள் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 16

சாவகச்சேரிப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் இறந்ததாக இரு இளைஞர்களது சடலங்கள் நேற்று முன்தினம் மாலை சாவகச்சேரி பொலீஸாரினால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

இனங்காணும் பொருட்டு சடலங்கள் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

(இ-139)

## மரணதண்டனை நிறைவேற்றுவது ஒத்திவைப்பு

ராஜீவ் காந்தி கொலைவழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள நால்வரின் தண்டனையை நிறைவேற்றுவதை உச்சநீதிமன்றம் அடுத்த மாதம் 17 ஆம் திகதி வரை ஒத்திவைத்துள்ளது.

மரண தண்டனைத் தீர்ப்பை மறு ஆய்வு செய்யுமாறு கோரி நளினி, முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோர் தாக்கல் செய்த மனு மீதான விசாரணை நேற்று நடந்த சமயமே இந்த உத்தரவு வழங்கப்பட்டது.

## கபடத்தனமான...

[முதலாம் பக்கத் தொடர்]

முன்னணிக் காவலரண்கள் எக் காரணம் கொண்டும் ஒரு அங்குலம்கூட பின்வாங்கப் படமாட்டாது என்று தெரிவித்துள்ளது.

இப்படியான கபடத்தனமான நிபந்தனைகளை நாம் ஏற்றுக்கொள்ளமுடியாது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகளிடம் திட்டவட்டமாக இதுபற்றிக் கூறியுள்ளோம் — என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[இந்த அறிக்கையின் முழு விவரம் 3 ஆம் பக்கத்தில்]

(இ-3-6)

## கால அவகாசம்,...

(9 ஆம் பக்கத் தொடர்)

விருக்கின்றனர்.

மனிதப் புதைகுழிகளில் இருந்து சடலங்கள் மீட்கப்பட்டதும் அவை பொலீஸாரிடம் ஒப்படைக்கப்படும். அந்தப் பணிக்கு ஏராளமான பொலீஸார் தேவைப்படுவர் அவர்களை வெளியிடங்களில் இருந்து கொண்டுவரவேண்டியுள்ளது.

பாதுகாப்பு நடவடிக்கையில் படையினரும் ஈடுபடுத்தப்பட வேண்டும்,

ஆகவே இந்தப் பணிகளை மேற்கொள்ள வசதியாக கால அவகாசம் வழங்க வேண்டும் என்றார். (இ-3-5)

## வெலிஓயாவில்...

[முதலாம் பக்கத் தொடர்]

புலிகளின் பதுங்கு குழிகள் மீது படையினர் ரொக்கெட்டுக்கள், இயந்திரத் துப்பாக்கிகள் என்பன சகிதம் தாக்குதல்களை மேற்கொண்டனர் என்றும்—

புலிகளின் பதில் தாக்குதலால் 3 படையினர் உயிரிழந்தனர் என்றும்—பாதுகாப்புத் தலைமையகம் மேலும் தெரிவித்தது.

இதேவேளை — வடக்கு – கிழக்கில் இடம்பெற்றவெவ்வேறு 5 சம்பவங்களில் 7 புலிகள் உயிரிழந்தனர் என்று தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது. (இ-6)

## வழிபடச் சென்ற சிறுமியருக்கு கிறிஸ்துநாதர் தரிசனம்

### நீர்கொழும்பில் அற்புதம் என தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 16

கோயில் ஒன்றுக்கு வழிபடச்சென்ற நான்கு சிறுமியருக்கு கிறிஸ்துநாதரின் தரிசனம் கிடைத்ததாகக் கூறப்படும் சம்பவம் நேற்று நீர்கொழும்பில் இடம்பெற்றது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

நீர்கொழும்பு, கடற்கரை வீதியில் குடாப்பாடு லூர்த்து மாதா கோயில் அமைந்துள்ளது. இந்தக் கோயிலுடன் பாடசாலையும் உள்ளது. இந்தப் பாடசாலையைச் சேர்ந்த நான்கு சிறுமியர் நேற்றுக் காலை 11 மணியளவில் பிரார்த்தனைக்குச் சென்றனர்.

இவர்கள் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த சமயம் அங்கு சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த கிறிஸ்துநாதரின் திருவுருவத்தில் இருந்து ஒளி வீசியதாகவும் —

கிறிஸ்து நாதர் கை அசைத்து அருகில் வரும்படி சிறுமியரை அழைத்ததாகவும்— சிறுமியர்களில் ஒருவர் மூர்ச்சித்து விழுந்து நீர்கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் நேற்று நீர்கொழும்பு பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

அற்புதம் நடந்ததாகச் சொல்லப்படும் கோயிலுக்கு நேற்று ஆயிரக்கணக்கானோர் சென்றனர். பொலீஸ் காவலும் போடப்பட்டது.

## வடக்கு-கிழக்கு...

[முதலாம் பக்கத் தொடர்]

இந்தச் சந்திப்பில் அரசு சார்பில் அமைச்சர்களான பேராசிரியர் ஜி. எல். பீரிஸ், எம். எச். எம்' அஷ்ரப் மற்றும் விக்னராஜா ஆகியோரும் —

ஐ. தே. க சார்பில் கொடித்துவக்கு, ஏ. சி. எஸ், ஹமீத், டி. எம். சுவாமிநாதன் ஆகியோரும் பங்குபற்றினர்.

இந்தச் சந்திப்பில் கொள்கை அளவில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் வருமாறு:-

★ வடக்கு — கிழக்கு இணைப்பை நிரந்தரமாக்கல்.

★ வடக்கு கிழக்கு மாகாணத்தில் வாழும் மககளுக்கு மகத்துவமான அதிகாரத் தீர்வு ஒன்றைக் காணுதல்—

★ நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்க சட்ட மூலம் கொண்டு வருதல்.

இந்தச் சந்திப்பு அடுத்த மாதம் 11 ஆம் திகதி முதல் தொடர்ந்து நடைபெறும் என்றும் —

இணக்கப்பாடு ஏற்பட்டு வருட இறுதிக்குள் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தப்படும் என்றும் — நேற்றைய சந்திப்பில் முடிவு செய்யப்பட்டது. (இ-3)

நிரு ரியூசன் சென்ரர்
கோண்டாவில்
A/L 2000 | 2001
தமிழ் - A. ஆர்த்திகன்
★ மாதாந்தப் பரீட்சைகளுடன் வழிகாட்டல் வகுப்புகள் நடைபெறுகின்றது.
(சி/8205)

மக்கள் வங்கியின் ஆதரவில்
யாழ். பல்கலைக்கழக
வெள்ளிவிழாவையொட்டி நடத்தப்படும்
உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின்
இறுதியாட்டம்
பாடும் மீன் வி. கழகம்
எதிர்
சென் அன்ரனிஸ் வி. கழகம்
பிரதம விருந்தினர்
பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
(துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)
காலம்: 16 – 07 – 99 வெள்ளிக்கிழமை 4.00 P.M
இடம்: யாழ். பல்கலைக்கழக வி. மைதானம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
பிரவேசம் இலவசம்.
போட்டிக் குழுவும்,
யாழ்.பல்கலைக்கழக உதைபந்தாட்ட அணியும்
(67485)

Computer Courses
New Batches Started on 10-07-1999
at 10-00 a.m
Certificate Courses of 4 Months duration
# MS Word
# MS Excel
# MS Access
# MS Power Point
# Visual Basic
# Pascal
For further details
— Director
IIS. Jaffna.
(C/8200)

## மரண அறிவித்தல்

### ம. வ. உமாவதிசிவம்

வட்டுக்கோட்டை சிவன் கோயிலடியைச் சேர்ந்த தமிழறிஞரும் பிரபல பேச்சாளரும் கல்விமானுமாகிய ம. வ. உமாவதிசிவம் (M.A) அவர்கள் நேற்று (15-07-99) வவுனியாவில் காலமானார்.

அன்னார் யாழ். மத்திய கல்லூரி, பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி, ஆகியவற்றின் முன்னைநாள் ஆசிரியரும் தொலைக்கல்வி சிரேஷ்ட விரிவுரையாளரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
ஆ. பரமானந்த சிவம்
(வட பிராந்திய போக்குவரத்து சபை)
(மைத்துனர்)
ம.ந. கடம்பேஸ்வரன்
(சகோதரன்)

வட்டுக்கோட்டை. (சி/8207)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16 - 07 - 1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org